# தமிழன்

THAMILAN தமிலன்

Follow us:

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 136 குரோதி வருடம், மார்கழி மாதம் 15ஆம் திகதி திங்கட்கிழமை (30.12.2024) ஹிஜ்ரி 1446, ஜ. ஆகிர் - 28, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12




## கமெண்ட் கந்தர்...

புதிய அரசியலமைப்பு என்கிறது வாள் போய் கத்தி வந்த கதைதான் போல..



## உஷ்




அமைச்சுகளின் சிரேஷ்ட செயலாளர்கள் 07 பேர் பொது நிர்வாக அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தகவல்.

சில சிரேஷ்ட செயலாளர்கள் ஏனைய அமைச்சுகளில் மேலதிக செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புதிய அரசாங்கம் அமையும் போது இவ்வாறான நியமனங்கள் பொதுவாக இடமாற்றம் செய்யப்படுவது வழமை. ஆனால், சிரேஷ்ட செயலாளர்கள் இளநிலை அதிகாரிகளின் கீழ் நியமிக்கப்பட்டுள்ளமை தான் இங்கு முக்கிய விடயம்.

# ஜனாதிபதிக்கான நிறைவேற்று அதிகார முறைமை இரத்து!

## அதிக அதிகாரங்களுடன் பிரதமர் புதிய அரசியலமைப்பில் ஏற்பாடு




புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கான ஆலோசனைகளை நடத்தி வரும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், அந்தப் புதிய அரசியலமைப்பில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்தாக்கி பாராளுமன்றத்துக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கி நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் பதவியை முன்னிறுத்தத் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, அடுத்த மாகாண சபைத் தேர்தல் நடந்துமுடிந்த கையோடு புதிய அரசியலமைப்புக்கான பணிகள் ஆரம்பமாக வுள்ளன.

தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம்...

»02 பக்கம்

# பிரதமரிடம் முறையிடலாம்

## மக்களின் கோரிக்கைக்கு இனி உடனடித் தீர்வு

தமிழ் பேசுவோரின் முறைப்பாடுகளை ஆங்கில மொழியில் பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் முன்வைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மின்னஞ்சல் மூலமாக முறைப்பாடுகளை முன்வைக்கும் பொருட்டு அவர் அதற்கு 03 நாட்களுக்குள் ஆரம்பக்கட்ட நடவடிக்கையை எடுத்து விட்டு பதில் தருவாரெனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக, அரச துறை அதிகாரிகளின் முறைகேடுகள், நேர்மையின்மைகளால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களுடைய முறைப்பாடுகளை முன்வைக்கலாமென கூறப்பட்டுள்ளது.

★ அவரது அஞ்சல் முகவரி – Dr. Harini Amarasuriya, No.58, Sir Ernest De Silva Mawatha, Colombo 07.

★அவரது மின்னஞ்சல் முகவரி - info@pmoffice.gov.lk...

»02 பக்கம்

# இலங்கை தூதரகங்களில் தொடரும் வெற்றிடங்கள்

## வெளிநாட்டு சேவையில் தாக்கம்

பிரித்தானியா உள்ளிட்ட பல நாடுகளின் தூதரகங்களில் தூதுவர்கள் நியமிக்கப்படாமல் வெற்றிடமாக உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் நிரந்தர தூதுக்குழு, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, ரஷ்யா, ஜப்பான், இந்தோனேஷியா,... »02 பக்கம்

# தென்கொரிய விமான விபத்து!

## 179 பேர் உயிரிழப்பு



»10 பக்கம்

# தமிழ் ஊடகத்துறை மீது தொடரும் அச்சுறுத்தல்

## நடவடிக்கை எடுக்க ஜனாதிபதியிடம் வடமராட்சி ஊடக இல்லம் வலியுறுத்து

»02 பக்கம்



# மனுஷவின் சகோதரருக்கு ஜன.6 வரை விளக்கமறியல்

»02பக்கம்










»03 பக்கம்




# ‘சீனாவின் சகோதர பாசம்’ திருமலையில் நிதியுதவி

»07 பக்கம்

# பாதுகாப்புப் படைகளின் பதவிநிலைப் பிரதானி பதவியிலிருந்து சவேந்திர சில்வா ஓய்வு

ஜெனரல் சவேந்திர சில்வா பாதுகாப்புப் படைகளின் பதவிநிலைப் பிரதானி பதவியிலிருந்து 2025 ஜனவரி 01ஆம் திகதி முதல் ஓய்வு பெறவுள்ளார்.

சவேந்திர சில்வாவின் சேவைக் காலத்தை கடந்த ஜூன் முதலாம் திகதியிலிருந்து எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதி வரை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீடித்திருந்தார்.

கடந்த 2019ஆம் ஆண்டு ஒகஸ்ட் 19ஆம் திகதி முதல் 2022 மே 31 வரை ஜெனரல் சவேந்திர சில்வா இராணுவத்தளபதியாக பணியாற்றினார்.



அதன் பின்னர், தனது பதவிக்காலம் நிறைவடைய, 2022 ஜூன் முதலாம் திகதி பாதுகாப்புப் படைகளின் பதவிநிலை பிரதானியாக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையிலேயே அவரது பதவிக்காலம் மேலும் 06 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது.

அதனையடுத்து, தற்போது புதிய அரசாங்கம் அமைந்திருக்கும் நிலையில் இவரது ஓய்வு தொடர்பில் தகவல் வெளியாகியிருக்கிறது.

# யாழ். மற்றும் கட்டுநாயக்க விமான நிலையங்கள் விஸ்தரிப்பு

இலங்கையின் யாழ்ப்பாணம் மற்றும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையங்கள் விஸ்தரிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான முன்மொழிவுகளை அரசாங்கம், சர்வதேச நிறுவனங்களிடமிருந்து கோரியுள்ளது. இலங்கையின் அரசால் நடத்தப்படும் விமான நிலைய முகாமைத்துவ நிறுவனம், யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தை (JIA) விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக புகழ்பெற்ற நிறுவனங்களிடமிருந்து முன்மொழிவுகளை கோரியுள்ளது.

எனினும், கொழும்பு விமான தகவல் பிராந்தியத்துக்கு அருகாமையில் விமான நிலையங்கள் காணப்படும் இந்தியா, மாலைத்தீவு, இந்தோனேஷியா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிடமிருந்து முன்மொழிவுகள் கோரப்படவில்லை.

போட்டித்தன்மை காரணமாக இவ்வாறு முன்மொழிவுகள் கோரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இலங்கை விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனமானது கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்துக்காக ஜப்பானிய நிறுவனங்களிடமிருந்து விலை மனுக்களை கோரியுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 18ஆம் திகதி வரையில் விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்டுநாயக்க விமான நிலையக் கட்டிடத்தை கட்டி முடிக்கும் இந்த திட்டமானது, ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகாமை நிதியத்தின் நிதி உதவியுடன் முன்னெடுக்கப்படவுள்ளது.

பிரதான முனைய கட்டிடம், உயரமான சாலை உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத் திட்டத்துக்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் காலக்கெடு ஜனவரி 29ஆம் திகதியன்று முடிவடைகிறது.

சர்வதேச விமான நிலைய மேம்பாட்டுத் திட்டத்துக்காக கடந்த பத்து ஆண்டுகளில் குறைந்தபட்சம் ஒரு சாத்தியக்கூறு ஆய்வையாவது மேற்கொண்ட விமான நிலைய ஆலோசனை நிறுவனங்கள் அல்லது கூட்டு முயற்சிகளில் இருந்து விலைமனுக் கோரப்பட்டது.

# இரண்டு நிறுவனங்களுக்கு மாத்திரமே வாகன இறக்குமதி அனுமதி

## கடந்த கால அரசாங்கத்தின் திட்டம் குறித்து வெளியான தகவல்

கடந்த அரசாங்க நிர்வாகத்தின் சர்ச்சைக்குரிய மின்சார வாகன இறக்குமதி திட்டத்தின்கீழ், இரண்டு நிறுவனங்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு இந்த வசதியை வழங்குவதற்காக, 31 நிறுவனங்கள், தம்மை பதிவு செய்திருந்தபோதும், குறித்த இரண்டு நிறுவனங்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் கண்டறிந்துள்ளது.

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள், நாட்டுக்கு அனுப்பும் வெளிநாட்டு பணத்தின் அடிப்படையில், அவர்களுக்கு மின்சார வாகன அனுமதிகளை வழங்குவதற்கான வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு இந்த திட்டத்தை முன்னெடுத்திருந்தது.

எனினும் இந்த திட்டத்தின்கீழ் ஒட்டோ கேபிடல் இன்வெஸ்ட்மென்ட் (பிரைவேட்)



லிமிடெட் 335 அனுமதிகளுக்கும் ஒவர்லேண்ட் ஒட்டோ மொபைல் 305 உரிமதாரர்களுக்கும் வாகனங்களை இறக்குமதி செய்து வழங்கியுள்ளன.

அதன்படி, குறித்த இரண்டு நிறுவனங்களும் மொத்த அனுமதிகளில் 64 சதவீதத்தை வழங்கியுள்ளன.

இந்த திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட 375 மின்சார வாகனங்கள் மட்டுமே ஜூலை 9 ஆம் திகதி நிலவரப்படி பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் வாகன உரிமதாரர்களால் 84 வாகனங்கள் மூன்றாம் தரப்பினருக்கு வழங்கப்பட்டன.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சக கோப்புத் தகவல்களின்படி, இந்த வசதியைப் பயன்படுத்திய புலம்பெயர்ந்த தொழிலாளர்களில் 164 பேர் கடற்படையினர், 150 முகாமையாளர்கள், மற்றும் 96 இயக்குநர்கள், 78 பொறியியலாளர்கள், 61 அதிகாரிகள், 24 ஆலோசகர்கள், ஒரு சர்வதேச கிரிக்கெட் நடுவர் மற்றும் மூன்று மருத்துவர்கள் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வாகன இறக்குமதிகளின்போது அடிப்படை விதிகள் கூட மீறப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

உதாரணமாக, இந்தத் திட்டத்தைப் பெற விரும்பும் ஒவ்வொரு இலங்கை புலம்பெயர்ந்தவரும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்திருக்க வேண்டும்.

எனினும் அனுமதியை கொண்டிருக்கும் 1,000 பேரில் 286 பேர் மட்டுமே தம்மை பதிவு செய்துள்ளனர்.

# விதிமுறைகளை மீறிய பஸ் சாரதியின் அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தம்

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை 750 வழித்தடத்தில் நேற்று முன்தினம் (28), ஓட்டுநர் விதிமுறைகளை மீறி பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பயணித்த தனியார் பஸ் உரிமையாளரின் சாரதி அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் க.மகேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கு அறிவித்துள்ளார்.

தனியார் பஸ் மேற்படி வழித்தடத்தில் ஓட்டுநர் விதிமுறைகளை மீறி பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பயணித்தமை தொடர்பாக சமூக ஊடகங்களில் காணொளிகள் பகிரப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு, வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவருக்கு வடக்கு மாகாண ஆளுநர் நேற்று முன்தினம் அறிவுறுத்தியிருந்தார்.

இதற்கமைவாக முதல்கட்டமாக குறித்த தனியார் பஸ் உரிமையாளரின் சாரதி அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் சாரதி, நடத்துனர் மற்றும் சிற்றூர்தியின் உரிமையாளர் மேலதிக நடவடிக்கைக்காக உரிய ஆவணங்களுடன் அதிகார சபைக்கு சமுகமளிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர் எனவும் அதிகார சபையின் தலைவர் க.மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

# திருட்டு கடவுச்சீட்டு பெற முயற்சித்த கான்ஸ்டபிள் பணி நீக்கம்

குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தில் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ளவந்த நபரை தனது நண்பர் என்று பொய்க்கூறி, கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள முயற்சித்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை பணிநீக்கம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

நாரஹேன்பிட்ட பொலிஸ் நிலையம், சஹுருபாய பொலிஸ் சோதனைச்சாவடியில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிளே இவ்வாறு பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள், சுஹுருபாய பொலிஸ் சோதனைச் சாவடியில் கடமையில் ஈடுபட்டிருந்த நிலையில், கடந்த 19 ஆம் திகதி குறித்த இடத்துக்கு அப்பால் கடவுச் சீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக வருகைத் தந்திருந்த பலாங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவருடன் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் அவசர கடவுச்சீட்டை பெற்றுக்கொடுக்கும் பரிந்துரை குழுவுக்கு குறித்த நபரை முன்னிலைப்படுத்தி கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள முயற்சித்துள்ளமை பொலிஸ் விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த தவறான செயற்பாட்டின் காரணமாக குறித்த கான்ஸ்டபிள், கொழும்பு தெற்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியினால் கடமை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

# மக்களுக்கு எதிராக செயற்பட்ட அரச அதிகாரிகளுடன் போராடுகிறோம்

## அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி

தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகளை பாதுகாப்பதற்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போது அரச அதிகாரிகளுடன் போராடி வருகின்றது. அதேசமயம் தேசிய மக்கள் சக்தி ஆட்சியை கைப்பற்றுவதற்கு முன்னர் மக்களின் உரிமைகளுக்காக வீதியில் இறங்கி போராட வேண்டியிருந்தது என கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

'ஷில்பாபிமானி' ஜனாதிபதி விருதுகள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றியபோது இதனை தெரிவித்தார்.

சில அதிகாரிகள் அரசாங்கத்தின் ஆணையை உணராமல், இன்னும் தங்கள் பழைய முடிவுகள், உடன்படிக்கைகள், அமைச்சரவை முடிவுகள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்களில் நிற்கிறார்கள்.

நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, மக்களின் உரிமைகளுக்காக, கொள்ளை, மோசடி மற்றும் ஊழலுக்கு எதிராக தெருக்களில் போராடினோம். மேலும் அரசாங்கத்தின் தவறான செயல்களை விமர்சித்தோம். இப்போது, நாம் வேலை செய்து முடிவுகளை எடுத்த அரச அதிகாரிகளுடன் போராட வேண்டும். மக்களுக்கு எதிராக செயற்பட்ட முன்னாள் அரசுகளின் கொள்கைகளின்படி, அவர்களுக்கு நிவாரணம் வழங்கினால், அவர்களின் உரிமைகளை மீறுவதில் தற்போது, பழைய நடைமுறைகளை அகற்றுவதில் அவர்களுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. கடந்த அரசாங்கங்களின் போது தாங்கள் கடைப்பிடித்த கொள்கைகளுக்கு எதிராக ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வதில் சிரமப்படுகின்றனர்.

இந்த நிலைமையை அதிகாரிகளை நம்ப வைப்பதும் கடினமாக இருப்பதாக கூறிய அமைச்சர், அதிகாரிகள் இன்னும் தங்கள் பழைய தீர்மானங்கள், உடன்படிக்கைகள், அமைச்சரவை முடிவுகள் மற்றும் வர்த்தமானி அறிவிப்புகளில் உறுதியாக இருப்பதாகவும் கூறினார்.




"மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, தேசிய பொருளாதாரம், உள்ளூர் தொழில்கள் போன்றவற்றை வலுப்படுத்த அவர்கள் முடிவுகளை எடுக்கவில்லை. ஆனால் வெளிநாட்டு சக்திகள், இறக்குமதியாளர்கள் மற்றும் பல தேசிய நிறுவனங்களை வலுப்படுத்த மட்டுமே அவர்கள் முடிவு எடுக்கவில்லை. அதற்கேற்ப வரிக் கொள்கைகளை அவர்கள் எடுத்துள்ளனர். அதிகாரிகள் இன்னும் வாதிடுகின்றனர். இன்று அவர்கள் எடுத்த முடிவுகளுக்காக எங்களுடன் போராட வேண்டும். நிதி அமைச்சகம், வரிக் கொள்கை போன்றவற்றுடன் நாங்கள் போராட வேண்டியுள்ளது'' என்றார்.

## இலங்கை...

மலேசியா, நேபாளம், பிரேஸில் மற்றும் 20 நாடுகளின் உயர்ஸ்தானிகர்கள் நாட்டுக்கு திரும்ப அழைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் அந்த நாடுகளுக்கான தூதுவர்களோ, உயர்ஸ்தானிகர்களோ நியமிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் நிரந்தர வதிவிட பிரதிநிதி குழாம், பிரித்தானியா, இந்தியா, ரஷ்யா மற்றும் அவுஸ்திரேலியா மற்றும் ஜப்பான் போன்ற முக்கிய நாடுகளுக்கான தூதுவர்களை நியமிக்கும் செயற்பாடு மந்தகதியில் இடம்பெறுவதாக குறிப்பிடப்படுகிறது.

இதன்காரணமாக பதில் தூதுவர்கள் கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது, இலங்கைக்காக சுமார் 60 தூதரகங்கள், உயர்ஸ்தானிகராலயங்கள் மற்றும் வெளிநாடுகளின் துணைத் தூதரக பொது அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

அவர்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு உயர் அதிகாரிகள் இல்லாமை வெளிநாட்டு இராஜதந்திர சேவையில் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ்...

(பு.கஜிந்தன்)

தமிழ் ஊடகத்துறை பல்வேறுபட்ட நெருக்குவாரங்களுக்கு முகம் கொடுத்து வரும் நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தின் சுயாதீன ஊடகவியலாளர் மு.தமிழ்ச்செல்வனை கடத்த முயற்சித்த நிலையில் அவர் மீது கடுமையான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடரும் அச்சுறுத்தல் நிலையின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளது என வடமராட்சி ஊடக இல்லம் தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றின் மூலம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

''சமூக மட்டத்திலும் நிர்வாக கட்டமைப்புகளிலும் இடம்பெற்று வரும் பல்வேறு சமூகவிரோத செயற்பாடுகள், முறைகேடுகளை பகிரங்கமாக ஊடக அறிக்கையிடல் மூலம் வெளிப்படுத்தி வரும் மு.தமிழ்ச்செல்வன் மீது கிளிநொச்சி நகரில் ஏ-9 நெடுஞ்சாலையில் வைத்து பட்டப்பகலில் மேற்கொள்ளப்பட்ட கடத்தல் மற்றும் தாக்குதல் முயற்சி சட்டம் ஒழுங்கை கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

போர் காலத்திலும் அதன் பின்னரும் தமிழ் ஊடகத்துறை ஆயுத முனையில் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டும் அதன்காரணமாக பல ஊடகவியலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டும் கடத்தப்பட்டு சடலங்களாக வீசப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் வந்துள்ளனர்.

ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னரான காலத்தில் தமிழர் தாயகத்தில் வன்முறை கலாசாரம் திட்டமிட்டு ஊக்குவிக்கப்பட்டு வருவதும் அதன் பின்னணியில் போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் சமூகவிரோத செயற்பாடுகள் சமூகமயப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆட்சி அதிகாரத்தில் உள்ளோரால் இவை கண்டும் காணாமல் விடப்படுகின்றமையும் அதற்கு காரணமானவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படாது பாதுகாக்கப்பட்டு வருகின்றமையும் ஆட்சிகள் மாறினாலும் மாற்றமேதுமின்றி தொடர்கின்றமை யானது அந்நிலையை மேலும் ஊக்குவிப்பதாகவே இருந்து வருகின்றமை என்நிலையிலும் மறுக்கவே முடியாத பேருண்மையாகும்.

இவ்வாறான நிலையில் முன்னைய காலங்களில் ஆயுத முனைகளால் பேச முடியாதவற்றை தற்காலத்தில் வன்முறைச் சம்பவங்கள் மூலமாக தமிழ் ஊடகத்துறையை மௌனிக்கச் செய்யும் உச்சபட்ட அடக்குமுறை செயற்பாடுகள் தீவிரம் பெற்றுள்ளன. இவ்வாறான நிலையில் நிகழ்ந்துள்ள இத்தாக்குதலானது ஊடக சுதந்திரத்தின் மீதான பாரிய அச்சுறுத்தலாகும்.

இச் செயற்பாட்டினை தனியே குறித்த ஒரு ஊடகவியலாளருக்கு எதிரான உரிமை மீறலாக கடந்து சென்றுவிட முடியாது. அந்தவகையில், சமூக விரோத செயற்பாடுகளை துணிச்சலுடன் வெளிச்சம் போட்டு காட்டிவரும் சுயாதீன ஊடகவியலாளர் மு.தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதல் சம்பவத்தை யாழ். வடமராட்சி ஊடக இல்லம் வன்மையாக கண்டிக்கின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கத்திலும் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்கின்றமை ஏமாற்றமே. இத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்டு இருவர் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் காரணமானது விடயத்தை திசைதிருப்பி உண்மை குற்றவாளிகளை காப்பாற்றும் நோக்கில் திட்டமிட்டு கூறப்பட்டிருப்பதாக, தாக்குதல் சம்பவத்தின் போது அவர்கள் வெளிப்படுத்திய வார்த்தைப் பிரயோகங்களின் பின்னணியில் ஆணித்தரமாக நம்பப்படுகின்ற நிலையில் தாக்குதல் சம்பவம் தொடர்பில் எமக்கும் பலத்த ஐயம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே குறித்த கைது சம்பவத்தோடு மட்டுப்படுத்தப்படாதாக விசாரணை நடவடிக்கைகள் முற்றுப்பெறாது பின்னிருந்து செயற்படுத்திய உண்மை குற்றவாளிகளை கண்டறிந்து நீதி நிலைநாட்டப்படுவதனை உறுதிசெய்யும் வகையிலானதாக முன்னெடுக்கப்பட வழிவகை செய்ய வேண்டும்.

தமிழ் ஊடகத்துறை மீது காலத்துக்கு காலம் வெவ்வேறு வடிவங்களில் தொடரும் அச்சுறுத்தல் நிலையினை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கும் அதற்கு காரணமானவர்களை பாரபட்சமின்றி சட்டத்தின் முன்நிறுத்தி உரிய நீதியினை வழங்குவதற்கும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இத்தருணத்தில் யாழ். வடமராட்சி ஊடக இல்லம் வலியுறுத்தி நிற்கின்றது'' என குறிப்பிடப்பட்டுள்ளது.

## பிரதமரிடம்...

- தொடர்பு தொலைபேசி இலக்கங்கள் – Tel: (+94) 112 575317 / 18, (+94) 112 370737 / 38.
- Fax Numbers – (+94) 112 575310, (+94) 112 574713.
- Hotline Number – 1919.

பிரதமரின் செயலாளர் தொடர்பு விபரங்கள்.
Mr. G. Pradeep Saputhanthri
Secretary to the Prime Minister
Salary Code: SL 4

- Tel: +9411 2575311
- Fax: +9411 2575310
- Email: secpm@pmoffice.gov.lk

## மனுஷவின்...

முன்னாள் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் சகோதரரான திசர நாணயக்கார கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நிதி மோசடி தொடர்பான முறைப்பாடு தொடர்பில் திசர நாணயக்கார பிபில பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பின்லாந்து நாட்டில் தொழில்வாய்ப்பை பெற்றுத் தருவதாக வாக்குறுதியளித்து, 40 இலட்சம் ரூபா பணம் கேட்டு அதில் 30 இலட்சம் ரூபாவை பெற்றுக்கொண்டதாக சந்தேகநபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் ஒருவரை தாக்கிய சம்பவம் தொடர்பில் 2018 டிசம்பர் 10 ஆம் திகதியும் அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவரை ஜனவரி 06ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா நீதவான் நேற்று உத்தரவிட்டார்.

## நிறைவேற்று...

நிறைவடைந்ததன் பின்னர் அமுல்படுத்தப்படவுள்ள புதிய அரசியலமைப்பின் இடைக்கால ஏற்பாடு ஒன்றும் உள்ளடக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதன் பின்னர், எதிர்காலத்தில் பெயரளவுக்கு ஜனாதிபதி பதவியை ஏற்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தற்போதைய அரசியலமைப்பு திருத்தப்பட்டாலும் தற்போதுள்ள விருப்பு வாக்கு முறையே தொடரப்பட வேண்டும் என சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் அரசாங்கத்திடம் முன்மொழிந்துள்ளன. தொகுதி அளவில் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டால் அது சிறுபான்மை பிரதிநிதித்துவத்துக்கு பலத்த தடையாக அமையும் என சிறுபான்மைக் கட்சிகள் கருத்து தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், உயர்நீதிமன்றத்தின் முடிவுக்கமைய, உத்தேச அரசியலமைப்பு வரைவு சர்வசன வாக்கெடுப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# தினசரி பலாபலன்கள்

## குரோதி வருடம் மார்கழி மாதம் 15ஆம் நாள் திங்கட்கிழமை

**மேஷம்** – பெரியோர்களின் கோபத்துக்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். தொழில் வியாபாரத்தில் அக்கறை காட்டுங்கள்.

**ரிஷபம்** – வீண் பழிகள் உங்கள் மீது சுமத்தப்படலாம். சற்று கஷ்டப்பட்டு உழைத்தாலன்றி பணம் கிடைப்பது அரிது.

**மிதுனம்** – பெண்களால் எதிர்பாராத சில செலவுகள், சிக்கல்கள் ஏற்படலாம். எதற்கும் முந்திக்கொண்டு வாய் வார்த்தைகளை விடாதீர்கள்.

**கடகம்** – பண ரீதியில் இருந்து வந்த சிக்கல்களை இன்று சமாளிப்பீர்கள். காதல் விவகாரங்களை சற்று கவனமாக கையாளுங்கள்.

**சிம்மம்** – நீண்ட நாள் பகைவர்கள் மன்னிப்புக் கோரி கரம் சேர்த்துக் கொள்வார்கள். மனதை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்க.

**கன்னி** – ஏதாவது வீண் வம்பு வழக்குகளில் மாட்டிக்கொள்ளாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பயணத் தடை உண்டு.

**துலாம்** – இன்ப அனுபவங்களால் திளைத்திருப்பீர்கள். யாரையும் நம்புவதற்கு முன்னர் ஒன்றுக்கு நான்கு முறை சிந்திக்கவும்.

**விருச்சிகம்** – தேவையான பணம் கையிருப்பில் இருந்தாலும் செலவுகளுக்கு குறையிருக்காது. வீண் கேலிப் பேச்சுக்களை தவிருங்கள்.

**தனுசு** – பிரச்சினை இன்றியே மனதைப்போட்டுக் குழப்பிக் கொள்வீர்கள். அவசியச் செலவுகளை நிச்சயம் செய்ய வேண்டிய நாள்.

**மகரம்** – ஏதோ ஒரு மனக்குறையோடு உலாவிக் கொண்டிருப்பீர்கள். உங்கள் பொருள்களைப் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள்.

**கும்பம்** – நண்பர்கள் மூலம் நீங்கள் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செலவுகளையும் பயணங்களையும் குறைத்துக் கொள்ளுங்கள்.

**மீனம்** – வெளியிடத்தவர்களின் பூரண அன்பும் அரவணைப்பும் நிறைந்த நாள். மனைவி மக்களோடு குதூகலித்திருப்பீர்கள்.

| | |
|---|---|
| **திதி** | : அமாவாசை பி.இ.3.56 வரை பின் பிரதமை |
| **நட்சத்திரம்** | : மூலம் மு.ப.11.57 வரை பின் பூராடம் |
| **பிறை** | : தேய்பிறை பி.இ.3.56 வரை பின் வளர்பிறை |
| **யோகம்** | : மரண யோகம் முழுவதும் |
| **வார சூலை** | : கிழக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்** | : காலை- 6.21–7.21 மணிவரை பகல் - 1.01 – 2.21 மணிவரை மாலை- 3.21 – 4.21 மணிவரை |
| **ராகு காலம்** | : 7.51 – 9.21 மணிவரை |
| **எமகண்டம்** | : 10.51–12.21 மணிவரை |
| **குளிகை** | : 1.51 – 3.21 மணிவரை |
| **சந்திராஷ்டமம்** | : இடப ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும். |

### அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்

**இன்று முற்பகல் 11.57 மணிவரை**

பரணி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**இன்று முற்பகல் 11.57 மணிக்குமேல்**

அஸ்வினி, கார்த்திகை, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**

**விசேட தினம்** : அமாவாசை விரதம், சோமவார விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**

**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325 078-6759739**

# ஹிங்குரக்கொட - மெதிரிகிரிய - கல்கமுவ
## நெல் களஞ்சியங்களை புனரமைக்க விசேட திட்டம்

வர்த்தக, வணிக, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க பல வருடங்கள் கைவிடப்பட்ட நிலையிலிருந்த ஹிங்குரக்கொட சதொச அரிசி ஆலை களஞ்சிய கட்டடத்தொகுதியின் கண்காணிப்புக்காக விஜயம் செய்திருந்தார்.

5000 மெற்றிக் தொன் கொள்ளளவு கொண்டவகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த களஞ்சியம், எதிர்வரும் பெரும்போக காலப்பகுதியில் விளைச்சலை கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவதற்காக மிக விரைவில் நவீனமயப்படுத்தவும் விரைவாக புனரமைக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த களஞ்சியத்தை மீள் பயன்பாட்டுக்கு எடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக விசேட ஒருங்கமைப்பு தமது ஒத்துழைப்பை வழங்குவதாக அறிவித்துள்ளது.

மேலும், அமைச்சர் உள்ளிட்ட சிலர் மெதிரிகிரிய தானியங்கள் பாதுகாப்பு மத்திய நிலையம் மற்றும் களஞ்சியமும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. 3000 மெற்றிக் தொன் கொள்ளளவு கொண்ட இந்த தானிய பாதுகாப்பு மற்றும் களஞ்சியம் சரியான முறையில் பயனுள்ள வகையில் தயார்படுத்துவதற்கான முறை யொன்றை தயாரிப்பதற்கும் எதிர்காலத்தில் அதிக தொகை விளைச்சல்களை களஞ்சியப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் அதன்போது



அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டி யுள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தில் நெல் விற்பனை சபையின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

அதேபோன்று, அண்மையில் 40,000 மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான நெல்லை களஞ்சியப்படுத்துவதற்கான 22 களஞ்சியங்களை கொண்ட கல்கமுவ பாரியளவான அரச களஞ்சிய கட்டடத்தொகுதிக்கும் கண்காணிப்பு விஜயம் செய்யப்பட்டுள்ளது. நெல்லுக்கு அவசியமான வெப்பத்தில் வைத்து களஞ்சியப்படுத்தும் வகையில் இயந்திரங்களுடன் கூடிய இந்த நெல் களஞ்சிய கட்டடத்தொகுதி 1977ஆம் ஆண்டிலிருந்து கைவிடப்பட்ட நிலையில் இருப்பதுடன் மீண்டும் பயன்பாட்டுக்கு எடுக்கும் வகையில் பராமரிப்பு செயற்பாடுகளை முன்னெடுத்து, நாட்டில் மீண்டும் அரிசித் தட்டுப்பாட்டை ஏற்படுத்தாமல் இருப்பதற்கான அடுத்தக் கட்ட செயற்பாடுகளை முன்னெடுக்கவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

# சாரதியை தாக்கிய குற்றச்சாட்டில்
## இன்னுமொரு சாரதி பணி இடைநிறுத்தம்

பு.கஜிந்தன்

தனியார் பஸ்ஸை மறித்து சாரதியை தாக்கிய குற்றச்சாட்டில் இன்னுமொரு தனியார் பஸ்ஸின் சாரதிக்கு வடக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் க.மகேஸ்வரனால் ஒரு மாத காலம் தற்காலிக பணி இடைநிறுத்தம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளமையையடுத்து மேற்படி தாக்குதலை நடத்திய சாரதிக்கு முன்னெச்சரிக்கை தண்டனையாக நேற்று முன்தினம் (28) முதல் ஒரு மாத காலத்துக்கு தற்காலிகப் பணி இடைநிறுத்தம் வழங்கப்பட்டுள்ளது.



இதுதொடர்பில் குறிப்பிட்ட சாரதி பயணித்த பஸ் உரிமையா ளருக்கு கடிதம் கடந்த 24ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் - யாழ்ப்பாணம் வழித்தடத்தில் கடந்த 5ஆம் திகதி பயணித்த தனியார் பஸ்ஸை வழிமறித்து நிறுத்தி, பஸ்ஸின் சாரதியை இருக்கையில் வைத்து தாக்கி அச்சுறுத்தியதாக வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றிருந்தது.

இதேவேளை, மேற்படி சாரதிக்கு எதிராக மீண்டும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றால் அவர் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட அனுமதி வழங்கப்படாது என்பதுடன் பஸ்ஸின் உரிமையாளருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் க.மகேஸ்வரன் எச்சரித்துள்ளார்.

# மன்மோகன் சிங்குக்காக இரங்கல் பதிவேடு
## இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு



இந்தியாவின் முன்னாள் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங் 2024 டிசம்பர் 26ஆம் திகதி புதுடில்லியில் காலமானார்.

கலாநிதி மன்மோகன் சிங் 2004 மே 22ஆம் திகதிமுதல் 2014 மே 26ஆம் திகதிவரை இந்தியாவின் 13ஆவது பிரதமராக சேவையாற்றியுள்ளார். புகழ்மிக்க பொருளாதார நிபுணராகவும் தொலை நோக்கு சிந்தனைகளைக் கொண்ட தலைவராகவும் கலாநிதி மன்மோகன் சிங் 1991 முதல் 1996 வரையில் நிதி அமைச்சராக சேவையாற்றி முக்கியத்துவம் மிக்க பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளை அறிமுகம் செய்து நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு வழிசமைத்திருந்தார்.

பணிவு, புலமை மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்கு பெயர்பெற்ற கலாநிதி மன்மோகன் சிங்கின் தலைமைத்துவமும் நேர்மையும் தலைமுறையினருக்கு தொடர்ந்து ஊக்கமளிப்பதுடன் வலுவான முன்னேற்றம் மற்றும் சேவையின் ஆழமான மரபினை விட்டுச் செல்கிறது. டாக்டர் மன்மோகன் சிங்குக்கு 1987இல் இந்தியாவின் இரண்டாவது உயரிய குடிமகன் விருதான பத்ம விபூஷண் விருது வழங்கப்பட்டது.

மறைந்த இத்தலைவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் இந்தியா முழுவதிலும் 2024 டிசம்பர் 26 ஆம் திகதி முதல் 2025 ஜனவரி 1ஆம் திகதி வரையில் ஒருவார கால தேசிய துக்க தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இதேவேளை, 2024 டிசம்பர் 30 முதல் 2025 ஜனவரி 1ஆம் திகதி வரை காலை 10 மணி முதல் மாலை 03 மணி வரை கொழும்பு - 03, இலக்கம் 36-38 இல் அமைந்துள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் இரங்கல் பதிவேடு வைக்கப்பட்டிருக்கும்.

# முச்சக்கர வண்டி விபத்து: சிறுவன் படுகாயம்

மல்வானை - பியகம வீதியில் பயணித்த முச்சக்கரவண்டியில் மோதி விபத்துக்குள்ளான ஒன்பது வயது சிறுவன் படுகாயமுற்று ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் (28) மல்வானை றக்ஸபான பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளதுடன் முச்சக்கர வண்டியில் மோதுண்ட சிறுவன் ட்ரெயிலர் வண்டியொன்றுடன் மோதியதால் ட்ரெயிலர் வண்டி நின்றுள்ளதாக கூறப்படுகின்றது.

முச்சக்கரவண்டியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் குறித்த சாரதியை மஹர மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் ஆஜர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பியகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் அஜித் விஜேசிங்ஹ தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2024 டிசம்பர் 30ஆம் திகதி, திங்கட்கிழமை

# ஊடகர் தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதலும் அரசின் மௌனமும்

கிளிநொச்சி ஊடகவியலாளர் மு.தமிழ்ச்செல்வனைத் தாக்கி கடத்துவதற்கு முற்பட்ட சந்தேக நபர்கள் கிளிநொச்சி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு கடந்த சனிக்கிழமை (28) நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவர்களை இன்று 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் குறித்த தினத்தில் அடையாள அணிவகுப்புக்குட்படுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

குறித்த சந்தேக நபர்கள் ஏற்கனவே போதைப்பொருள் உட்பட பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டவர்கள் என்றும் அவை தொடர்பான வழக்குகள் காணப்படுவதாகவும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் தமிழ்ச்செல்வனைக் கடத்த முற்பட்டதையும் அவர் மீதான தாக்குதலையும் இலேசான விடயங்களாகக் கருதிவிட முடியாது. காரணம், அவர் மீதான அச்சுறுத்தல் என்பது அவரின் ஊடக எழுத்தினால் ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாகவே எப்போதும் தமிழ்ச்செல்வனுடைய ஊடகப் பங்களிப்புகள் இருந்தன. ஆகவே, அவை ஒடுக்கப்பட்ட, பாதிக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய மேம்பாட்டுக்கும் அவர்களுடைய விடுதலைக்கும் குரல்கொடுத்தன.

மணல் கொள்ளை, காடுகள் அழிப்பு என்பனவற்றுக்கு எதிராக எழுதி தமிழ்ச்செல்வன் சுற்றுச்சூழலிலும் தீவிரப் பற்றோடு இயங்கியவர். சூழற்கேடுகளை வலுவான முறையில் எதிர்த்து ஊடகத்தின் வழியாகவே போராடியவர். அவற்றுக்கு உறுதுணையாக நிற்கும் ஊழலுக்கும் அதிகார துஷ்பிரயோகங்களுக்கும் எதிராகக் களமாடியவர்.

ஊடகவியலாளரைத் தாக்கி கடத்த முற்பட்டவர்களின் முயற்சி வெற்றிபெற்றிருப்பின் அவர்கள் தமிழ்ச்செல்வனை நாட்டில் இதர ஊடகர்களை இல்லாமலாக்கியது போல செய்திருப்பர். ஆனாலும், அதிர்ஷ்டவசமாக அவர் தப்பித்துள்ளார்.

கடந்த 20 ஆண்டுகளாக ஊடகப் பணியாற்றிவரும் தமிழ்ச்செல்வன், யுத்த காலத்திலும் யுத்தத்துக்குப் பிந்திய காலத்திலும் துணிச்சலாகவும் நேர்மையாகவும் பணியாற்றியவர். இத்தகைய சிறப்பு மிக்க ஊடகவியலாளர் ஒருவரின் மீதான தாக்குதலானது, மக்களுடைய நல்வாழ்வுக்கான எதிர்காலத்தின் மீதான அச்சுறுத்தலாகவே கொள்ளப்பட வேண்டும்.

ஊடகவிலாளர் மீதான இந்தக் கடத்தல் முயற்சியும் தாக்குதலும் ஊடகத்துறையின் சுயாதீனத்துக்கும் ஊடகவியலாளரின் சுதந்திரமான செயற்பாட்டுக்கும் விடப்பட்டுள்ள அச்சுறுத்தலாகும். நாடு புதிய பாதையில் பயணிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கும் சூழலில் இத்தகைய சம்பவங்கள் மக்களிடையே பதற்றத்தை உருவாக்குவதோடு ஊடகத்துறைக்கும் பாரிய சவாலை ஏற்படுத்துகிறது. இந்தச் சம்பவம் குறித்து உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

இந்தச் சம்பவம் தொடர்பாக உரிய விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளின் மீது சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கான பொறுப்பு புதிய அரசாங்கத்துக்குண்டு. அதை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

ஊடகரைக் கடத்தி அச்சுறுத்தல் விடுத்தால் அச்சத்தில் அவர் தனது எழுத்தை நிறுத்திவிடுவார் என்ற எண்ணம் கடத்தல்காரர்களுக்கு இருக்கலாம்.

அல்லது ஊடகரைக் கடத்தி அவரின் உயிருக்கு உலைவைத்தால் வேறு யாரும் இப்படியான எழுத்துகளைத் தொடரமட்டார்களென்ற எண்ணமும் கடத்தல்காரர்களுக்கு இருக்கலாம். ஆனால், அப்படியெல்லாம் எண்ணுமளவுக்கு நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலைமை மோசமாக இருக்கிறதே என்ற அச்சம் இப்போது ஏற்படுகிறது. பட்டப்பகலில் இப்படியான ஒரு கடத்தல் முயற்சி இடம்பெற்றிருப்பதே பாரிய ஆபத்தான விடயமாகும்.

ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசு இந்த விடயத்தில் ஆக்கபூர்வமாக நடந்துகொண்டதாகத் தெரியவில்லை. தென்னிலங்கையின் சிங்கள ஊடகர் ஒருவருக்கு பாதாள உலகக் கோஷ்டி அச்சுறுத்தல் விடுத்ததாகச் செய்தியொன்று வெளியானபோது அந்த ஊடகருக்கும் அவரின் வீட்டுக்கும் பொலிஸ் பாதுகாப்பை வழங்கிய பாதுகாப்புத்துறை இன்று தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதலை கண்டுகொள்ளாமலிருப்பது துயரம் மிக்கது.

வெறுமனே நல்லாட்சி என்று புராணம் பாடாமல் ஜனநாயகத் தூண்களில் ஒன்றான ஊடகத்துறையின் பிரதிநிதிகளைக் காப்பாற்ற - பாதுகாக்க ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கிளிநொச்சி தமிழ்ச்செல்வன் என்றாலே ஆட்சியாளர்களுக்கு இருக்கும் அலர்ஜி தானோ ஊடகர் தமிழ்ச்செல்வன் விடயத்தில் அரசு மௌனம் காப்பதன் அர்த்தம்?

ஊடகர் மீதான தாக்குதல்தாரிகள் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்படுவார்கள். அதன் பின்னர் எல்லாம் சரியாகிவிடுமென்று ஆட்சியாளர்கள் நினைப்பார்களாயின் அது தவறான கருதுகோளாகும்.

அந்தச் சம்பவத்தில் குற்றவாளிகளாகக் காணப்படுவோருக்கு உயர்ந்தபட்ச தண்டனை வழங்கப்படவேண்டும். அதனைச் செய்யும் பொறுப்பு அரசிடமும் பாதுகாப்புத்துறையிடமும் இருக்கிறது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

# மன்மோகன் சிங் என்றொரு மாமனிதர்!



**கே.வி.கே. பெருமாள்**

பொதுவாக ஒரு பிரபலமான மனிதரோ, உயர் பதவியில் இருக்கிற அல்லது இருந்த ஒருவரோ மறைந்து விட்டால் ஈடு செய்ய முடியாத இழப்பு என்று சொல்வது சம்பிரதாயம். ஆனால், டாக்டர் மன்மோகன் சிங்கின் மறைவு, அவர் சார்ந்திருந்த அரசியல் கட்சிக்கு மாத்திரமல்லாமல், இந்திய தேசத்துக்கே ஈடு செய்ய முடியாத பேரிழப்பு என்று குறிப்பிட்டால் அது சம்பிரதாயத்துக்காக அல்ல, முற்றிலும் உண்மையான கூற்று.

மத்திய அரசில் முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரத்திடம் நீண்ட காலம் பணியாற்றியதன் காரணமாக உயர் பதவிகள் வகித்த பலரோடு பேசுவதற்கும் சிலரோடு பழகுவதற்கும் அவர்களது திறமை பற்றி நுணுக்கமாக அறிந்து கொள்வதற்கும் எனக்கு வாய்ப்புக் கிட்டியது.

நான் பார்த்த அரசியல்வாதிகளில் - நிர்வாகிகளில் முற்றிலும் மாறுபட்ட ஒரு மனிதராக டாக்டர் மன்மோகன் சிங் விளங்கினார். வர்த்தகத் துறையில் பொருளாதார ஆலோசகர் என்ற பதவியில் தொடங்கி, நிதித் துறையில் தலைமைப் பொருளாதார ஆலோசகர், மத்திய நிதித்துறைச் செயலர், இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர், திட்டக் குழுவின் துணைத் தலைவர் என்று படிப்படியாக உயர்ந்து பின்னர் இந்திய நிதி அமைச்சராக விளங்கி கடைசியில் உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டின் பிரதமர் என்ற தலைமைப் பதவிக்கு வந்தார். என்றாலும், தான் வகித்த பதவிகள் எதையுமே அவர் பதவிகளாகப் பார்த்ததில்லை. மாறாக, அவற்றையெல்லாம் தனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புகளாக - விடுக்கப்பட்ட சவால்களாக ஏற்றுக்கொண்டு இடைவிடாமல் உழைத்தார். அந்த தன்னலமற்ற உழைப்புத்தான் இன்று அவரைப்பற்றி ஒவ்வொருவரையும் பேச வைத்திருக்கிறது.

எளிமைக்கும் நேர்மைக்கும் உதாரணமாகக் காட்டப்படக் கூடிய தகுதி பெற்றவராக அவர் திகழ்ந்தார். உணவு, உடை என்று எல்லாவற்றிலும் எளிமையைக் கடைப்பிடித்தவர். வீட்டிலிருந்து கொண்டுவரும் 2 அல்லது 3 சப்பாத்திகளும் வேகவைத்த காய்கறிகளுமே அவரது மதிய உணவு. மதிய உணவுக்காக வீட்டுக்குச் சென்றாலும் ஒரு மணி நேரத்தில் அலுவலகம் திரும்பி விடுவார்.

கடைநிலை ஊழியரிடம்கூட கடிந்து பேச மாட்டார். பேச்சிலும் செயலிலும் தன்னால் யாரும் காயப்பட்டுவிடக் கூடாது என்பதில் மிக உறுதியாக இருப்பார். பத்திரிகையாளர்கள் எவ்வளவு கோபப்படுத்தும் கேள்விகளைக் கேட்டாலும் சாதாரணமாக அவர்களது கேள்விகளை எதிர்கொள்வார்.

மன்மோகன் சிங் பிரதமர் பதவிக்கு வந்த புதிதில் அவரைக் காண வந்த அவரது மனைவியின் உறவினர் ஒருவர், அவரோடு காலை உணவு அருந்தினார். அப்போது அரசாங்கத்தில் தனக்கு ஆகவேண்டிய ஒரு வேலை குறித்து அவர் பேசத் தொடங்க, உடனே தன் மனைவியை அழைத்த மன்மோகன் சிங், ‘யார் என்னைப் பார்க்க வந்தாலும், இது போன்ற கோரிக்கைகளைக் கொண்டுவரக் கூடாது’ என்று கூற, அந்த உறவினர் அவர் பிரதமர் பதவி முடியும் வரை அவரது இல்லத்தின் பக்கமே செல்லவில்லை. அந்த அளவுக்கு நேர்மையில் கறாராக இருந்தார்.

இந்தியாவின் வரலாற்றில் விடுதலை கிடைத்த 1947ஆம் ஆண்டு எவ்வளவு முக்கியமோ, அந்த அளவுக்கு பொருளாதாரத்தில் நாம் ‘யு வளைவு’ எடுத்த 1991ஆம் ஆண்டும் முக்கியம் தான். அப்போதைய பிரதமர் நரசிம்ம ராவ், டாக்டர் மன்மோகன் சிங் மீது வைத்திருந்த முழு நம்பிக்கையைப் பயன்படுத்திக் கொண்டு பொருளாதாரத்தில் இந்தியாவை ‘உலகத்தோடு ஒட்ட ஒழுக’ வைத்தார். அதற்கு அவர் பெற்றிருந்த உலகளாவிய பொருளாதார அறிவு உறுதுணையாக இருந்தது.

அன்று புதிய பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்தும் முடிவை நரசிம்மராவும் மன்மோகன் சிங்கும் செயற்படுத்தாமல் இருந்திருந்தால் இந்தியா பின்னோக்கி நகர்ந்திருக்கும். இன்றைக்கு நாம் பொருளாதாரத்தில் ஓரளவு தன்னிறைவோடு இருப்பதற்குக் காரணம் அவர்கள் இருவரும் இட்ட அடித்தளம் தான்.

அவ்வாறு பொருளாதாரக் கொள்கையைப் புரட்டிப் போட்ட நேரத்திலும் டாக்டர் சிங் ‘‘பொதுவாக ஒரு நிதி அமைச்சர் என்பவர் சற்று கடினமானவராகத்தான் இருக்க வேண்டும். ஆனால், நான் மென்மையான இதயத்தோடுதான் மக்களின் பிரச்சினைகளை அணுகப் போகிறேன்’’ - என்று சொன்ன வாசகம் நாட்டு மக்கள் மீது அவர் கொண்டிருந்த அபிமானத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு.

பொருளாதாரம் தொடர்பான சில கொள்கை முடிவுகள் எடுக்கப்படும்போது, நிதி அமைச்சகத்துக்கும், ரிசர்வ் வங்கிக்கும் சில கருத்து வேறுபாடுகள் தோன்றுவது இயல்பு. காரணம், நிதி அமைச்சகம் மக்களோடு நேரடியாகத் தொடர்புடையது. எனவே, சில நேரங்களில் மென்மையான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆனால், நாட்டின் பொருளாதாரக் காப்பாளராக இருக்கக்கூடிய ரிசர்வ் வங்கி, சற்றுக் கடினமான முடிவுகளை எடுக்க நேரும். அதுபோன்ற நேரங்களில் பிரதமர் தலையிட்டு, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது வழக்கம். தான் நிதி அமைச்சராக இருந்தபோதும் சரி, பிரதமராக இருந்தபோதும் சரி அப்படிப்பட்ட தருணங்களைத் தனது சாதுர்யத்தால் சமாளித்தவர் மன்மோகன் சிங்.

மன்மோகன் சிங் பிரதமராக இருந்த 10 ஆண்டுகளில் நிதி அமைச்சர் பதவியை வகித்தவர்கள் பொருளாதாரத்தில் ஆழங்காற்பட்டவர்களான ப.சிதம்பரமும் பிரணாப் முகர்ஜியும். மேலும், அந்தக் காலகட்டத்தில் ரிசர்வ் வங்கியின் ஆளுநர்களாக இருந்தவர்கள் பொருளாதாரத்தில் நிபுணத்துவம் பெற்றிருந்த டாக்டர் ஒய் வி ரெட்டி, டாக்டர் டி சுப்பா ராவ், டாக்டர் ரகுராம் ராஜன் போன்ற மேதைகள். இவர்கள் அத்தனை பேரையும்விட, தான் உயர்ந்த பதவியில் இருந்தாலும் அவர்களைத் தனக்குச் சமமாகப் பாவித்து, அவர்களுக்கு உரிய மரியாதை அளித்து வந்தார்.

பொருளாதாரம் மட்டுமன்றி, தகவல் அறியும் உரிமைச் சட்டம், நூறு நாள் வேலைவாய்ப்புத் திட்டம், கல்வி உரிமைச் சட்டம், உணவுப் பாதுகாப்புச் சட்டம் என்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல சட்டங்கள் அவர் பிரதமராக இருந்தபோது உருவாக்கப்பட்டவை என்பதே அவரது ஆற்றலுக்கும் துணிச்சலுக்கும் கட்டியம் கூறுபவை.

அவர் பிரதமராக இருந்தபோது 2004 முதல் 2009 வரை இருந்ததுபோல, 2009 முதல் 2014 வரையிலான காலகட்டம் அமையவில்லை. கரடுமுரடுகள் நிறைந்த காலமாக அது அமைந்தது. அடுத்தவர்கள் மனம் நோகாமல் நடந்துகொள்ள வேண்டும் என்ற அவரது மென்மையான சுபாவம்கூட அதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். மேலும், ஏதாவது தந்திரங்கள் செய்து தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமென்று அவர் ஒருபோதும் நினைத்ததில்லை.

அமெரிக்கத் தலைவர்களில் ஒப்பற்றவரான பராக் ஒபாமா, ‘‘டாக்டர் மன்மோகன் சிங் பேசினால் உலகமே கவனிக்கிறது. அவர் எனது குரு’’ - என்று சொன்னதை உலகமே வியந்து நோக்கியது.

மேலும், அமெரிக்காவில் பணியாற்றிய இந்திய அதிகாரியான தேவயானி கோர்பகடே விவகாரத்தில் அவர் அமெரிக்க அரசுக்கு எதிராக எடுத்த அதிரடி நடவடிக்கையையும் வரலாறு பதிவு செய்திருக்கிறது. பொதுவாக, ஓர் அலுவலகத்தில் பணியாற்றும் ஒருவர் ஒரு பதவியிலிருந்து மேலே உள்ள இன்னொரு உயர் பதவிக்குச் சென்றுவிட்டால், நடை, உடை, பாவனைகள் என அனைத்தும் மாறி விடும். ஆனால், 1971இல் மன்மோகன் சிங் வணிகத்துறையில் பொருளாதார ஆலோசகராக இருந்தபோது, அவரிடம் இருந்த குணாதிசயங்கள் அவர் பிரதமர் பதவி வகித்த 2014 வரை மாறவேயில்லை என்பதுதான் அவரது சிறப்பு.

1996ஆம் ஆண்டு ஐக்கிய முன்னணி அரசு அமைந்த நேரத்தில் அப்போதைய பிரதமர் தேவ கௌடா, ஜி.கே.மூப்பனார் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களுக்கு நிதியமைச்சராக இருந்த ப.சிதம்பரம் அளித்த விருந்து நிகழ்வுக்கு டாக்டர் மன்மோகன் சிங் சென்றிருந்தார்.

வட இந்திய மற்றும் தென்னிந்திய உணவுகள் அன்று பரிமாறப்பட்டன. தனக்கு தென்னிந்திய உணவு வகைகள் மிகவும் பிடிக்கும் என்று சொன்ன மன்மோகன் சிங், ‘காரமில்லாத உணவு எதுவோ அதை தனக்குக் கொடுங்கள்’ என்று என்னிடம் கேட்டார். வெஜிட்டபிள் ஊத்தப்பம் விரும்பிச் சாப்பிட்டார். போகும்போது எனது தோளைத் தொட்டு அவர் நன்றி சொன்னபோது நான் திக்குமுக்காடிப் போனேன். அந்த அளவுக்கு எளிமையின் உச்சமாகத் திகழ்ந்தார்.

ஒரு கடைநிலை ஊழியர்கூட, தனது பதவியைக் காப்பாற்ற எந்த அளவுக்கும் குனியத் தயாராக இருக்கும் இன்றைய உலகில், எப்போது வேண்டுமானாலும் தனது பிரதமர் பதவியைத்தூக்கி எறியத் தயார் நிலையில் அவர் இருந்தார். பதவிகள், விருதுகள் போன்றவற்றை விரும்பாத அந்த மேதைக்கு இந்திய அரசு ‘பாரத ரத்னா’ விருது வழங்கிக் கௌரவிக்க வேண்டும்.

*நன்றி - தினமணி*

## இன்றைய நாளில்...

- 1916 – ரஷ்ய மந்திரவாதியும் ரஷ்யப் பேரரசரின் ஆலோசகருமான கிரிகோரி ரஸ்புடின், இளவரசர் பீலிக்ஸ் யுசுப்போவின் ஆதரவுப் படைகளினால் கொல்லப்பட்டார். இவரது உடல் மூன்று நாட்களின் பின்னர் மொஸ்கோ ஆறொன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டது.
- 1924 – யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ் மாநாட்டில் சாதி ஒழிப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.
- 1941 – மகாத்மா காந்தி இந்திய தேசிய காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருந்து விலகினார்.
- 1943 – சுபாஷ் சந்திர போஸ் அந்தமான் தீவுகளின் போர்ட் பிளையர் நகரில் இந்திய விடுதலைக் கொடியை ஏற்றினார்.
- 1949 – இந்தியா சீனாவை அங்கீகரித்தது.
- 2006 – முன்னாள் ஈராக் அரச தலைவர் சதாம் ஹுசேன் தூக்கிலிடப்பட்டார்.
- 2006 – முல்லைத்தீவு மாவட்ட கத்தோலிக்க ஆலயத்தால், கடல்கோளால் பாதிக்கப்பட்டவர்களைப் பராமரிக்கும் ஆண், பெண் விடுதிகள் மீதும் பொதுமக்கள் வீடுகள் மீதும் விமானத் தாக்குதல் நடைபெற்றதில் ஐந்து சிறுவர்கள் படுகாயமடைந்தனர்.

## நக்கல் நமசிவாயம்

**திருகோணமலை தமிழ் மக்களுக்கு சீனா நிவாரணம் கொடுத்துள்ளதாம்.. இனியென்ன அடுத்து இந்தியாவும் கொடுக்க வேண்டும் என்று யாராவது சொல்வாங்களே...**



# இந்தியாவின் ஆதரவு எமக்கு மகிழ்ச்சியே!

## இராமநாதபுரத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி.பேட்டி



*திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது*

''இலங்கை - இந்திய நாடுகளுக்கிடையிலான பொருளாதாரத் தொடர்பை மேம்படுத்தும் முயற்சியில் இந்திய அரசு மிகுந்த ஆர்வத்தைக் காட்டுகிறதென்பது ஒருபுறமிருக்க, இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் நிலவும் எல்லாப் பிரச்சினைகளையும் நல்ல முறையில் தீர்த்துக்கொள்வதற்கு எமது இலங்கை ஜனாதிபதியும் இந்தியப் பிரதமரும் தீர்மானித்திருக்கிறார்கள் என்பது எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சிதரக்கூடியதாக அமைந்திருக்கிறது'' என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சிக்காக தமிழகம் வந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவரும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கு சனிக்கிழமை(28) இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இராமநாதபுரம் மாவட்டம் சார்பில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொஹிதீன், மாநில முதன்மை துணைத் தலைவர் எம். அப்துல் ரஹ்மான், மாநில துணைத் தலைவரும் தமிழ்நாடு வக்பு வாரிய தலைவருமான கே. நவாஸ் கனி, மாநில பொருளாளர் எம்.எஸ்.ஏ.ஷாஜகான், இராமநாதபுரம் மாவட்டத் தலைவர் வருசை முஹம்மது, மாவட்ட செயலாளர் பைசல், மாநில துணைச் செயலாளர் மேலப்பாளையம் அப்துல் ஜப்பார் மற்றும் நிர்வாகிகள் சிறப்பான வரவேற்பளித்தனர்.

பின்னர் இராமநாதபுரம் விருந்தினர் இல்லத்தில் அன்றையதினம் மாலை ரவூப் ஹக்கீம் எம்.பி. செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

''நான் எனது தனிப்பட்ட அலுவல் காரணமாகத்தான் இப்பொழுது இந்தியாவுக்கு வந்திருக்கிறேன். இருந்தபோதிலும், உங்களோடு சில கருத்துகளைப் பகிரும் இந்த நல்ல வாய்ப்பைப் பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியா - இலங்கைக்கிடையிலான நட்புறவுக்கு மிகப்பெரும் பாலமாகத் திகழ்ந்தவரும் இந்திய பொருளாதாரத்தின் சிற்பியாகத் திகழ்ந்தவருமான இந்திய முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கினது மறைவுச் செய்தி பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இந்திய அரசினருக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினருக்கும் கூட்டணிக் கட்சியினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் இந்திய - இலங்கை நட்புறவுக்குப் பாலமானவர் மட்டுமல்ல, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப்பெரிய தூணாகவும் திகழ்ந்தவர் என்ற அடிப்படையில், இந்த முழு பிராந்தியத்திலும் அவருக்கென தனிச்சிறப்பும் தனி முக்கியத்துவமும் இருக்கிறதென்பதை நாம் எல்லோரும் அறிவோம். அப்படிப்பட்ட பொருளாதார நிபுணரின் மறைவு நம் அனைவரையும் பாதித்திருக்கிறதென்றால் அது மிகையாகாது.

இலங்கையில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தியாவுக்கு அண்மையில் வருகை தந்து சென்றிருக்கிறார். அவரது இந்த விஜயம், இந்திய - இலங்கை நட்புறவு மென்மேலும் மேம்பட முக்கிய காரணமாக அமையுமென்று நம்புகிறேன்.

இந்தியா - இலங்கை நாடுகளுக்கிடையிலான பொருளாதாரத் தொடர்பை மேம்படுத்தும் முயற்சியில் இந்திய அரசு மிகுந்த ஆர்வத்தைக் காட்டுகிறது என்பது ஒருபுறமிருக்க, இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் நிலவும் எல்லாப் பிரச்சினைகளையும் நல்லமுறையில் தீர்த்துக்கொள்வதற்கு எங்களது இலங்கை ஜனாதிபதியும் இந்தியப் பிரதமரும் தீர்மானித்திருக்கிறார்கள் என்பது எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சிதரக்கூடியதாக அமைந்திருக்கிறது.

**கேள்வி: இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினைக்குத் தீர்வுகாண இத்தனை ஆண்டுகள் ஆகின்றனவே. இன்னும் தீர்வு வரவில்லையே, ஏன்?**

**பதில்:** எனது அன்பு நண்பர் நவாஸ் கனியும் சகோதரி கனிமொழியும் அடிக்கடி என்னிடம் கொண்டுவருகிற துர்ப்பாக்கியமான பிரச்சினை இது. இந்தியா, இலங்கை இரண்டு நாடுகள் மட்டும் தீர்மானித்துவிட்டால் இந்தப் பிரச்சினை தீர்ந்து விடாது. மாறாக, இது ஒரு சமூகப் பிரச்சினை. இருநாட்டு மீனவ மக்களினதும் வாழ்வாதாரப் பிரச்சினை. இதை உணர்ந்துகொண்டு, அதற்கேற்ப சில விட்டுக்கொடுப்புகளை இரு தரப்புகளும் செய்துகொண்டால் நல்லதொரு சுமுகமான முடிவு கிட்டும். அப்படிக் கிடைக்கவேண்டும் என்பதுதான் எங்களுடைய விருப்பமும் அவாவுமாக இருக்கிறது.

தமிழ்ப் பேசும் மக்கள் என்கிற அடிப்படையில், தமிழ்நாட்டு மக்களுக்கும் இலங்கை வடக்குப் பகுதி வாழ் மீனவ மக்களுக்குமிடையில் பாரம்பரியமான தொப்புள்கொடி உறவு இருக்கிறது. எனினும், இலங்கை கடற்படையினர் இப்படியான அத்துமீறல்களில் நடந்துகொள்கிறார்கள் என்று சொல்லாடல்கள் தமிழ்நாட்டில் அடிக்கடி நடப்பதும், அதுபோல தங்களுடைய மீன்வளங்களை இந்திய மீனவர்கள் அளவுக்கு மீறி அபகரித்துக்கொள்கிறார்கள் என இலங்கை மீனவர்களும் அடிக்கடி இந்த விவகாரத்தில் முன்னுக்குப் பின் முரணாக பல அம்சங்களைச் சொல்லித் திரிவதும் ஆரோக்கியமானதல்ல. எனவே, இவ்விரு தரப்பினருக்குமிடையில் இப்பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

எனவே, இது தொடர்பில் இலங்கை அரசு, இந்திய ஒன்றிய அரசு, தமிழ்நாடு மாநில அரசு, இந்திய - இலங்கை மீனவர்கள் அனைவரும் இணைந்து தீர்வுகாண வேண்டும். அதற்கான முயற்சிகள் பல கோணங்களில் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. அதுவரையிலாவது இருதரப்புகளிலும் அத்துமீறல்களும் அடாவடித்தனங்களும் பறிமுதல்களும் நிறுத்தப்பட வேண்டும் என்பதுதான் எல்லோரினது கோரிக்கையாகவும் இருக்கிறது. அண்மையில் இந்திய தலைநகர் டில்லிக்கு விஜயம் செய்த எங்களது ஜனாதிபதியிடம் இந்திய அரசும் இதைத்தான் கூறியிருக்கிறது. எனவே, இது தொடர்பில் ஆரோக்கியமான நல்ல முடிவு நிச்சயம் கிடைக்குமென்று நாங்கள் பெரிதும் நம்புகிறோம்.

அப்படி ஒரு செய்தியை நானும் பார்த்தேன். ஒரு தேர்தல் முடிந்த சூட்டோடு அமைச்சர் சூடாகக் கதைப்பது என்பது சர்வசாதாரணமாக நடக்கிற ஒரு நிகழ்வுதான். அப்படித்தான் இதுவும் இருக்குமென்று நான் கருதுகிறேன். இப்படிக் கதைப்பதன் மூலம் நாம் சார்ந்த மீனவ சமூகத்துக்கு கொள்ளி போடக்கூடிய வேலையாகத்தான் இது இருக்கும். இது தொடர்பில் இன்னும் நல்லிணக்கத்துடன் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இப்போதைய தேவையாக இருக்கிறது. அப்படித்தான் முதிர்ச்சியடைந்த அரசியல்வாதிகள் நினைக்கிறோம்.

எனவே, இன்னும் கொஞ்சம் கூடுதலாக இராஜதந்திரமாக நடப்பதுதான் நல்லது. இது இரு தரப்பினரிடையேயும் நிலவும் மனிதாபிமான, வாழ்வாதாரப் பிரச்சினை. இதனால் சில சட்டமீறல்கள் நடக்கத்தான் செய்கின்றன. இயன்ற வரை கொஞ்சம் நெகிழ்வுத்தன்மையோடு இப்பிரச்சினையை அணுகுவதுதான் சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதே எமது தாழ்மையான அபிப்பிராயம். இதையே நாங்கள் இரு தரப்பினரிடையேயும் வலியுறுத்தி வருகிறோம்.

**கேள்வி: இலங்கை மற்றும் இந்திய மீனவர்கள் பிரச்சினை அடிக்கடி நடக்கிறது. நிரந்தரத் தீர்வு என்ன?**

**பதில்:** தமிழ்நாட்டு மீனவர்கள் இதை உணர்வுபூர்வமான அம்சமாகப் பார்க்கிற காரணத்தால் இலங்கை அரசுடன் இந்திய ஒன்றிய அரசுத் தொடர்பு சற்று நெகிழ்வுத் தன்மையுடன் நடந்து கொள்ளும். சட்டத்துக்கப்பால் இது வாழ்வாதாரப் பிரச்சினை. ஆழ்கடல் மீனவர்களுக்கு அவர்களுக்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான ஏற்பாடுகள், பாக் நீரிணையில் இருக்கிற மீன் வளங்கள் அளவுக்கு அதிகமாகச் சூறையாடப்படுகின்றன என்பவைதான் இப்போதுள்ள பிரச்சினைகள். எனவே, இவற்றுக்கான மாற்றுத் தீர்வுகளை விரைவாக வழங்கியாக வேண்டும்.

மீன்வளம், மீன்களின் இனப்பெருக்கம், உற்பத்தி ஆகியவற்றைப் பாதிக்கும் வகையிலான மீன்பிடி முறைகள் இருநாட்டு மீனவர்களுக்கிடையிலும் இருக்கின்றன என்பதுதான் இப்பிரச்சினையின் மூலம். எனவே, மாற்றுத் தீர்வு காண்பதற்கான சில வழிமுறைகளை இரண்டு மீனவ சமூகங்களும் கூட்டாகப் பேசி, விட்டுக் கொடுத்து நிரந்தர தீர்வுக்கு வரவேண்டும்.

இது இன்று நேற்றுத் தொடங்கிய பிரச்சினையல்ல. இது போலவே ஐரோப்பா, ஆபிரிக்க நாடுகள், பிலிப்பைன்ஸ், மலேசியா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகளிலும் நெடுங்காலமாக இவ்வாறான பிரச்சினை இருந்து வருகிறது. காரணம், கடல் சூழ இருக்கும் வெவ்வேறு நாடுகளுக்கிடையில் இப்பிரச்சினைகள் ஏராளமாக இருக்கத்தான் செய்யும். எனவே, இதில் நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டுமானால் இப்பொழுது இருப்பதை விட இன்னும் நெகிழ்வுத்தன்மையோடும் விட்டுக் கொடுத்தும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும்.

**கேள்வி: இலங்கையில் மாகாணத் தேர்தல் வரும்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் இணைந்து பயணிப்பீர்களா அல்லது உங்கள் நிலைப்பாடு என்ன?**

**பதில்:** இதுகுறித்து கட்சி கூடித்தான் தீர்மானிக்க வேண்டும். மாகாண சபைத் தேர்தலுக்கு முன்பு உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடப்பதாகத்தான் இப்பொழுது சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதனடிப்படையில் சில சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் அடுத்த அமர்வில் நிறைவேற்றப்படவிருக்கின்றன. மீனவர் பிரச்சினை குறித்து எழுந்தது போல, மாகாண சபைத் தேர்தல் குறித்தும் ஒரு சர்ச்சை எழுந்திருந்தது. இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்துக்குப் பிறகு மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலும் இந்திய அரசு கொஞ்சம் கரிசனை காட்டும் என்பதாகச் சொல்லப்படுகிறது.

**கேள்வி: உங்களுடன் பயணித்த மூத்த அரசியல் தலைவர் மனோ கணேசன் உள்ளிட்டவர்களையெல்லாம் நடைபெற்று முடிந்த இலங்கை பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் பெரிதும் புறக்கணித்திருக்கிறார்களே... இது குறித்து என்ன கருதுகிறீர்கள்?**

**பதில்:** இம்முறை நடைபெற்ற தேர்தல் என்பது ஒரு சுனாமிப் பேரலை போன்றது. இம்முறை ஒரு மாறுபட்ட அரசியல் சூழல் உருவாகியிருக்கிறது. பல மூத்த தலைமைகள் தோல்வியைத் தழுவினாலும் அவர்களில் நண்பர் மனோ கணேசனை பாராளுமன்ற உறுப்பினராக எப்படியும் கொண்டுவர வேண்டுமென்பதற்காக தேசியப் பட்டியல் ஊடாக அவருக்குப் பாராளுமன்ற அந்தஸ்தை எங்களது கூட்டணி வழங்கியிருக்கிறது. இன்னும் பலர் இம்முறை பாராளுமன்றத்தில் இடம்பெறவில்லை என்பது கவலைக்குரியதாக இருந்தாலும், ஜனநாயகத்தில் இவை அனைத்தும் சகஜமாக நடப்பவைதான் என்ற அடிப்படையில் இவற்றையெல்லாம் கடந்து செல்ல வேண்டியதுதான்.

**கேள்வி: இலங்கை ஜனாதிபதி அண்மையில் இந்தியாவுக்கு வந்தார். அடுத்த மாதம் சீனா செல்வதாகச் செய்திகள் கூறுகின்றன. இலங்கை அரசு உண்மையில் யாருடன் உண்மையான நட்பைப் பாராட்டுகிறது?**

**பதில்:** இலங்கையைப் பொறுத்தமட்டில் எங்களது அரசின் வெளியுறவுக் கொள்கை சர்வதேச மட்டத்தில் எல்லா நாடுகளையும் ஒரே அளவில் கையாள வேண்டும் என்பதாகத்தான் இருக்கிறது. அது அப்படித்தான் இருக்க வேண்டும். அதிலும் இந்தப் பிராந்தியத்தில் இலங்கை ஒரு மிகச்சிறிய நாடு என்கிற அடிப்படையில், அண்டை நாடுகள் அனைத்தோடும் நல்ல உறவைப் பேணவேண்டுமென்று இலங்கை கருதுகிறது.

இலங்கையில் நிலவிய பொருளாதார நெருக்கடியின்போது இந்திய அரசு மிகப் பெரியளவில் உதவியது. அண்மையில் நிலவிய கொரோனா கொடுந்தொற்று தொடர்பில் இலங்கை மக்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளைப் பாரிய அளவில் செய்தது. இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினையின்போது 04 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை மிகப்பெரிய பொருளாதார உதவியைத் தந்துதவி, எங்களைப் பொருளாதாரப் பின்னடைவிலிருந்து பாரியளவில் மீட்டெடுத்திருக்கிறது இந்திய அரசு என்பதையெல்லாம் நாங்கள் எளிதில் மறந்து விட முடியாது.

இந்தியா, சீனா நாடுகளுடன் எங்களுக்குள்ள கடனை மறுசீரமைப்புச் செய்வதற்கான விவகாரத்தில் ஐ.என்.எவ். - சர்வதேச நாணய நிதியத்தின் மேற்பார்வையில் நாங்கள் உடன்பாடு கண்டிருக்கிறோம். இப்படியான சூழலில், இலங்கைக்கான பொருளாதார உதவிகளைப் பாரியளவில் தந்துதவிய இவ்விரு நாடுகளுக்கு இடையிலும் சம அளவில் உறவுகளைப் பேணவேண்டிய கடப்பாடு எங்களுக்கு இருக்கிறது. எனவே, இலங்கை ஜனாதிபதி டில்லிக்குப் போய்விட்டு பீஜிங்குக்கும் போகவுள்ளார் என்பது குறித்து யாரும் மாற்றமாக எண்ணிக்கொள்ள வேண்டியதில்லை. எல்லாம் சுமுகமாக நடக்குமென்று நாங்கள் நம்புகிறோம்.

**கேள்வி: இலங்கையில் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாகத்தான் மிகப்பெரிய மக்கள் புரட்சி ஏற்பட்டிருக்கிறது. இந்தக் குறுகிய காலத்தில் அநுரவின் அரசியல் ஸ்திரத்தன்மை எப்படியிருக்கிறது? எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு வடக்குப் பகுதியில் அதிக வாக்குகள் கிடைத்தன. எனவே, இவருக்கு அங்கு ஆதரவு இருக்கிறதா, இல்லையா? வடக்கில் இப்பொழுதுள்ள சூழ்நிலை என்ன? அத்தியாவசியப் பொருட்களுக்கான விலையும் அடுத்தடுத்து ஏறிக்கொண்டே செல்வதற்கான காரணம் என்ன?**

**பதில்:** நாங்கள் இந்தியாவுக்கு வந்தாலும் சரி, நவாஸ் கனி இலங்கைக்கு வந்தாலும் சரி, எங்கள் உள்நாட்டு அரசியல் குறித்து வெளிநாடுகளில் அலட்சியமாகப் பேசுவதில்லை. உள்நாட்டில் நாங்கள் வெவ்வேறு விதமான அரசியல் போட்டிகளில் இருக்கத்தான் செய்வோம். இப்பொழுது தேர்தல் முடிந்து விட்டது. அவர் எங்கள் நாட்டின் ஜனாதிபதி. அவரது தலைமையில்தான் நாடு முன்னேறிச் செல்ல வேண்டியிருக்கிறது. இந்தியாவுடனான உறவு முன்பை விட பெரிதும் மேம்பட வேண்டுமென்பதே எங்களது எதிர்பார்ப்பு. இதைத் தாண்டி உங்களது இதர கேள்விகளுக்கு விடையளிப்பதை நான் தவிர்த்துக் கொள்கிறேன்.

**கேள்வி: கச்சதீவு ஒப்பந்தம் விஷயமாக மீண்டும் இந்தியாவிடம் ஒப்படைக்க சாத்தியமிருக்குமா?**

**பதில்:** கச்சதீவு ஒப்பந்தம் என்பது 1970களின் தொடக்கத்தில் இந்தியாவின் பெருந்தன்மை அடிப்படையில் செய்து தீர்வு காணப்பட்ட இந்திய - இலங்கை நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தம். அது முடிவாக்கப்பட்ட ஒரு விவகாரம். அப்படியிருக்க, அதை மீளக் கிண்டிக் கிளறி, அதன் காரணமாக இந்திய - இலங்கை உறவில் விரும்பத்தகாத ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முயலாமல், இப்பொழுதிருக்கும் பிரச்சினைகளை நல்ல முறையில் தீர்க்க எல்லோரும் இணைந்து முயற்சிப்பதுதான் சாலச்சிறந்தது; காலத்தால் அவசியமானது. -இவ்வாறு அவர் கூறினார்.

**வரைவுள்ள அட்டாளைச்சேனை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**அட்டாளைச்சேனை – பதிவு இல: கல் 122 of 25.02.1971**

**அறிவித்தல்**

வரைவுள்ள அட்டாளைச்சேனை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 10 கிளைகளுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் கீழ் காட்டப்படும் திகதிகளில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

**2025.01.04 ஆம் திகதி சனிக் கிழமை காலை 9.00 மணிக்கு கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் நடைபெறும் இடங்கள்.**

- AD/02 – அல் - ஹம்றா மகாவித்தியாலயம், ஒலுவில்.
- AD/03 – அல் ஹிதாயா மகளிர் கல்லூரி, பாலமுனை.
- AD/04 – மின்ஹாஜ் மகா வித்தியாலயம், பாலமுனை.
- AD/06 – அறபா வித்தியாலயம், அட்டாளைச்சேனை.
- AD/07 – அல் - ஜென்னா வித்தியாலயம், அட்டாளைச்சேனை.

**2025.01.05 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் நடை பெறும் இடங்கள்.**

- AD/08 – அல் - முனிறா வித்தியாலயம், அட்டாளைச்சேனை.
- AD/09 – மத்திய மகா வித்தியாலயம், அட்டாளைச்சேனை.
- AD/10 – ரீ.பீ. ஜாயா வித்தியாலயம், அட்டாளைச்சேனை.
- AD/11 - இக்றா வித்தியாலயம், அட்டாளைச்சேனை.
- AD/14 – றகுமானியா வித்தியாலயம், ஆலங்குளம் அட்டாளைச்சேனை.

வாக்களிக்கத் தகுதி பெற்ற அனைத்து அங்கத்தவர்களும் கூட்டங்களுக்குச் சமூகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்வதுடன் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய தேசிய அடையாள அட்டை அல்லது ஏற்றுக் கொள்ளக் கூடிய அடையாள அட்டை ஆகியவற்றைக் கொண்டு வரவும்.

**குறிப்பு:-** கிளைப் பொதுச் சபைக் கூட்ட அழைப்பிதழ் கடிதம் கிடைக்கப் பெறாத அங்கத்தவர்கள் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்தி உரிய கிளைப் பொதுச் சபைக் கூட்டத்திற்குச் சமூகமளிக்க முடியும்.

இயக்குனர் சபைக் கட்டளைப்படி,
செயலாளர்,
வரைவுள்ள அட்டாளைச்சேனை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
அட்டாளைச்சேனை,
2024.12.27

# சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்க விசேட திட்டம்

## ஆட்கடத்தல் தொடர்பில் கவனஞ்செலுத்துமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்பு



போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத பொருட்கள் நாட்டுக்குள் வருவதைத் தடுத்தல், விமான நிலையம், சுங்கத் திணைக்களத்துக்குள் நடக்கும் ஊழல், மோசடிகளை மட்டுப்படுத்தல், சட்டவிரோதமான முறையில் நபர்கள் நாட்டிலிருந்து வெளியேறுவதைத் தடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம், இலங்கை சுங்கம், விமான நிலையம் மற்றும் விமான சேவை நிறுவனத்தின் பிரதானிகளுக்குமிடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் (28) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத பொருட்கள் நாட்டுக்குள் வருவதைத் தடுத்தல், விமான நிலையம், சுங்கத் திணைக்களத்துக்குள் நடக்கும் ஊழல், மோசடிகளை மட்டுப்படுத்தல், சட்டவிரோதமான முறையில் நபர்கள் நாட்டிலிருந்து வெளியேறுவதைத் தடுப்பது குறித்து இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அதற்காக, குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம், இலங்கை சுங்கம், விமான நிலையம் மற்றும் விமான சேவை நிறுவனம் ஆகிய மூன்று நிறுவனங்களிலும் இணை கெமரா கட்டமைப்பு மற்றும் கண்காணிப்பு நிலையத்தை ஸ்தாபிக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆலோசனை வழங்கினார்.

அதேபோல், தற்போதுள்ள ஸ்கேன் இயந்திரங்களுக்குப் பதிலாக மேம்படுத்தப்பட்ட நவீன ஸ்கேன் இயந்திரங்களைப் பயன்படுத்தி இந்த நிறுவனங்கள் ஊடாக நடக்கும் கடத்தல்களைத் தடுப்பதற்கு நடைமுறைச் சாத்தியமான புதிய செயல்முறையை ஆரம்பிக்க வேண்டுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும், நாட்டு மக்கள் மத்தியில் சுங்கம் தொடர்பில் தற்போது காணப்படும் தவறான புரிதல்கள் களையப்பட வேண்டுமெனவும் அதற்காக கடுமையான ஒழுக்காற்று மற்றும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்பதையும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதன்போது வலியுறுத்தினார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாரநாயக்க, சுங்கப் பணிப்பாளர் நாயகம் சரத் நோனிஸ், குடிவரவுக் கட்டுப்பாட்டாளர் நாயகம் (பதில்) பீ.எம்.டி. நிலுஷா பாலசூரிய, நிதி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (தேசிய வரவு - செலவு) ஜூட் நிலுக் ஷான், விமான நிலையம் மற்றும் விமான சேவை நிறுவனத்தின் தலைவர் எயார் சீப் மார்ஷல் ஹர்ஷ அபேவிக்ரம உள்ளிட்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# இலஞ்சக் குற்றச்சாட்டில் கைதான சலோச்சன கமகேக்கு விளக்கமறியல்



இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சலோச்சன கமகே மற்றும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய வர்த்தகர் ஆகியோர் எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரையும் கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

09 மில்லியன் ரூபா இலஞ்சம் பெற்ற மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சலோச்சன கமகே மற்றும் அதற்கு ஆதரவாக செயற்பட்ட வர்த்தகர் ஒருவரையும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் கடந்த 27 ஆம் திகதி கைது செய்தனர்.

கோட்டை, மாதிவெல பிரதேசத்தில் நபரொருவர் செய்த முறைப்பாட்டுக்கமைய புறக்கோட்டைப் பகுதியிலுள்ள கடையொன்றின் முன்பாக வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

டொரிங்டன் அவென்யூ பகுதியில் முறைப்பாட்டாளரின் உறவினர் ஒருவருக்குச் சொந்தமான காணியொன்றை நகர அபிவிருத்தி அதிகார சபை கையகப்படுத்தியதன் பின்னர், அதற்கான இழப்பீட்டுத் தொகையை உடனடியாகப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான ஆதரவை வழங்குவதாகக் கூறி சந்தேகநபர்கள் இலஞ்சம் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை வந்துள்ள இந்தோனேஷியக் கப்பல்





இந்தோனேஷிய கடற்படைக்குச் சொந்தமான SIGMA – CORVETTE வகையைச் சேர்ந்த கப்பலான KRI SULTAN ISKANDAR MUDA -367 கப்பல் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதுடன் இலங்கை கடற்படையினால் இந்தக் கப்பலுக்கு சம்பிரதாயபூர்வமான வரவேற்பும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கொழும்பு துறைமுகத்துக்கு வருகை தந்துள்ள KRI SULTAN ISKANDAR MUDA -367 கப்பல், 90.71 மீற்றர் நீளம் கொண்டதாகும். அதன் கட்டளை அதிகாரிகளாக கமாண்டர் அநுகெரா அனுருல்ல (ANUGERAH ANNURULLAH) கடமையாற்றுகிறார்.

மேலும், KRI SULTAN ISKANDAR MUDA -367 கப்பல் நாட்டில் தங்கியிருக்கும் காலப்பகுதிக்குள் நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிடும் பணிகளில் பங்குபற்றவுள்ளதுடன், உத்தியோகபூர்வ சுற்றுப்பயணத்தை நிறைவு செய்து இன்று நாடு திரும்புமென்று கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# கூட்டுறவுத் துறையைக் கட்டியெழுப்புவோம்

## இளங்குமரன் எம்.பி. தெரிவிப்பு

(பு.கஜிந்தன்)



கூட்டுறவுச் சங்கம் முன்னைய காலத்தில் எவ்வாறிருந்தது, இப்போது எவ்வாறிருக்கிறது எனச் சிந்திக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் செயலிழந்த நிலையில் சென்றுகொண்டு இருக்கின்றன. கூட்டுறவுத் துறையைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு எமது அரசாங்கத்துக்கு உள்ளதென தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் நேற்று (29) இடம்பெற்ற கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

''விலை நிர்ணயம் எல்லை மீறி தனியார் கைகளில் செல்கின்றது. இதுவரை இருந்த அரசியல்வாதிகள் அதனை தனியாரின் என்று கூறினார்கள். ஆனால், நாங்கள் அதனை வியாபார மாபியா என்றுதான் கூற வேண்டும். அதனால் தான் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் செயலிழந்துள்ளன. கூட்டுறவுச் சங்கங்கள் பலமாக இருந்தால், விலை நிர்ணயம் என்பது கூட்டுறவுச் சங்கத்தால்தான் தீர்மானிக்கப்படுமென்று திடமான நம்பிக்கை எமது அரசாங்கத்துக்கு உண்டு.

விலைகள் அதிகரிக்கும்போதும், பொருட்களுக்கு தட்டுப்பாடு காணப்படும்போதும் கூட்டுறவுச் சங்கங்கள் பலமாக இருந்தால் அனைத்து சேவைகளும் சிறப்பாக அமையும். சங்கானையிலுள்ள 35 கிளைகளில் இன்று 08 தான் இயங்குகின்றன. ஏனெனில், மக்கள் அருகிலுள்ள கடைகளில் பொருட்களைக் கொள்வனவு செய்கின்றார்கள். வியாபாரம் என்பது அரசியல் மாபியாவிடம் சிக்கி, வியாபாரம் அரசியல் பின்னூட்டலில் நடைபெறுகிறது.

அரசியல்வாதிகள் மாறியுள்ளார்கள். ஆனால், அந்த சிஸ்டம் (முறைமை) மாறவில்லை. இதுதான் நியதி. ஆனால், அரசியல்வாதிகளுக்கும் மாபியாக்களுக்குமிடையேயுள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. இனிமேல் எங்களது பெயரைப் பாவித்து செல்வாக்கைப் பயன்படுத்த முடியாது. ஏனெனில், நாங்கள் கட்டமைப்புக்கூடாக இயங்க ஆசைப்படுகிறோம்''- என்றார்.

# யோஷித ராஜபக்ஷவுக்கு சி.ஐ.டி. அழைப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரான யோஷித ராஜபக்ஷவுக்கு சட்டவிரோதமாக சொத்துச் சேர்த்தமை தொடர்பில் வாக்குமூலம் வழங்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அறிவித்துள்ள நிலையில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் அவரை எதிர்வரும் 3ஆம் திகதி வாக்குமூலம் பதிவு செய்ய வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரதான பாதுகாப்பு அதிகாரி நெவில் வன்னியாராச்சியிடம் கடந்த 27ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அவரிடம் நான்கு மணிநேரம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நெவில் வன்னியாராச்சியிடம் பெருந்தொகை சொத்துகள் இருப்பதாகக் கூறப்படும் விவகாரத்தில் அவற்றை அவருக்கு எவ்வாறு பெற்றுக்கொண்டார் என்பது தொடர்பிலேயே இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

# ரோயல் பீஸ் மகளிர் அமைப்பின் 7ஆவது வருடாந்த பரிசளிப்பு விழா








(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டியில் இயங்கிவரும் ரோயல் பீஸ் மகளிர் அமைப்பின் (Royal Bees Ladies Organization) 7ஆவது வருடாந்த பரிசளிப்பு விழா திகன, ரஜவெல்ல, சனச வழுக்கி கேட்போர் கூட மண்டபத்தில் மிக விமர்சையாக நடைபெற்றது.

கண்டி மாவட்ட பாடசாலையில் கல்வி பயிலும் மிகவும் பின்தங்கிய குடும்ப மூவின மாணவர்களின் கல்வி நலனோம்புகை விடயங்கள் மற்றும் மகளிர் மேம்பாட்டு விடயங்களில் அக்கறைகொண்டு மகளிர் மாத்திரம் உறுப்பினர்களைக் கொண்டு ஏழு வருடங்களாக மாவட்டத்தில் மேற்படி பணிகளை முன்னெடுத்து வரும் இந்த மகளிர் அணி தனது ஏழாவது பரிசளிப்பு விழாவை கடந்த சனிக்கிழமை (26) கொண்டாடியது.

இவ்விழாவில் கலை, கலாசார மற்றும் பொதுத் துறைகளில் திறமைகளை வெளிக்காட்டிய மாணவ மாணவிகள் கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் பாடசாலைகளில் கல்வி பயில்கின்ற 114 மாணவர்களுக்கு சுமார் ஒரு வருடத்துக்குப் போதுமான பாடசாலை அப்பியாசக் கொப்பிகள் மற்றும் பாடநூல்கள், உபகரணப்பொருட்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

அமைப்பின் தலைவி எம்.என்.எவ். சிபானா தலைமையில் நடைபெற்ற இந்தப் பரிசளிப்பு விழாவில் வத்துகாமம் கல்வி வலய மேலதிக கல்விப் பணிப்பாளர் ஐ.ஹாசீம், இலங்கை மின்சார சபையின் பணிப்பாளரும் பொறியியலாளருமான எம்.எம்.என்.முனவ்வரா, தெல்தெனிய பொலிஸ் நிலைய மக்கள் தொடர்பு அதிகாரி ஆர்.எம்.எம்.ரன்முல்ல, அகில இலங்கை (தும்பறை) ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவர் டாக்டர் மௌலவி எம்.என்.எம். முர்ஷித் ஆகியோர் இங்கு உரையாற்றினர்.

# ரயிலில் மோதுண்டு யானை உயிரிழப்பு

(அநுராதபுரம் நிருபர்)



கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த புலதிசி கடுகதி ரயிலில் மோதி காட்டு யானையொன்று உயிரிழந்துள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்கள மின்னேரிய தேசிய வனப் பூங்கா அதிகாரி தெரிவித்தார்.

கிழக்கு ரயில் வீதியின் ஹபரணை ரயில் நிலையத்துக்கும் கல்ஓயா சந்திக்குமிடைப்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் (28) 8.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பவத்தில் 12 -15 வயதுக்கிடைப்பட்ட காட்டுயானையொன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

ரயிலில் மோதிய யானைக்கு சிகிச்சையளிப்பதற்காக சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்ட வன ஜீவராசிகள் திணைக்கள மிருக வைத்தியர்களினால் தீவிர சிகிச்சை வழங்கப்பட்டபோதிலும், நேற்று (29) அதிகாலை 2.30 மணியளவில் யானை உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வனஜீவராசிகள் திணைக்கள மின்னேரிய அலுவலக உத்தியோகத்தர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.




## முச்சக்கரவண்டியை திருடிய ஐவர் கைது – கொழும்பு

முச்சக்கரவண்டிகளைத் திருடிய குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் ஐவர் கொழும்பு மத்திய குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்டேஸ் வீதி பிரதேசத்தில் கடந்த 27ஆம் திகதி கொழும்பு மத்திய குற்றவிசாரணைப் பணியகத்தின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய சந்தேகநபரினால் திருடப்பட்ட 09 முச்சக்கரவண்டிகள் மற்றும் அந்தத் திருட்டுப் பொருட்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் நால்வர் நேற்று முன்தினம் (28) சீதுவ, மாளிகாவத்தை, கிராண்ட்பாஸ் மற்றும் வெல்லம்பிட்டிய ஆகிய பொலிஸ் பிரிவுகளில் கைதுசெய்யப்பட்டு கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சீதுவ, ஒருகொடவத்த, கொழும்பு -10 மற்றும் கொழும்பு -14 ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 31, 38, 51 மற்றும் 54 வயதுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த முச்சக்கரவண்டிகள் கோட்டை, கிரிபத்கொட, வத்தளை மற்றும் பொரளை ஆகிய பொலிஸ் பிரிவுகளிலிருந்து திருடப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளதுடன் கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

★★★

## ஐஸ் போதைப்பொருளுடன் நபரொருவர் கைது – பேலியகொட

பேலியகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போரனுகொடுவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் (28) பேலியகொட பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 12 கிராம் 500 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபரான பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பேலியகொட பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய சந்தேக நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் பேலியகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

★★★

## ஹெரோயினுடன் இருவர் கைது – பானம

பானம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரிமெட்டி சந்திக்கருகில் நேற்று முன்தினம் பானம பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 05 கிராம் 220 மில்லிகிராம் நிறைகொண்ட ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் 05 கிராம் 180 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பானம பிரதேசத்தைச் சேர்ந்த 24 மற்றும் 31 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் பானம பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

★★★

## சடலம் மீட்பு – பல்லேகல

பல்லேகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நத்தரம்பொத பிரதேசத்தில் நேற்று முன்தினம் (28) மஹாவலி கங்கையில் சடலமொன்று இருப்பதாகக் கிடைத்த தகவலுக்கமைய பல்லேகல பொலிஸாரினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொலொங்கஹவத்த, கெங்கல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 69 வயதுடைய நபரொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபர் கடந்த 26ஆம் திகதியிலிருந்து காணாமல் போயிருந்ததாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், அவசர மரண பரிசோதனைகளின் பின்னர் சடலம் தெல்தெனிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் பல்லேகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

★★★

## கொலைச் சம்பவம் - எஹலியகொட

எஹலியகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளுகஹபிட்டிய பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (27) கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாகக் கிடைத்த தகவலுக்கமைய எஹலியகொட பொலிஸ் நிலையத்தில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தில் எஹலியகொட, புளுகஹபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குடும்பப் பிரச்சினை வலுவடைந்தமை காரணமாக உயிரிழந்த பெண்ணின் மகளின் கணவரால் அவர் கொலை செய்யப்பட்டுள்ளமை விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், இந்த கொலைச் சம்பவத்தின் பின்னர் சந்தேகநபர் அந்தப் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

சடலம் நீதவானின் விசாரணைகளின் பின்னர் அவிசாவளை வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபரைக் கைதுசெய்வதற்காக மேலதிக விசாரணைகளை எஹலியகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

★★★

## புதையல் தோண்டிய இருவர் கைது – தம்பகல்ல

தம்பகல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாமல்ஓய ஜனபதய பிரதேசத்தில் நேற்று முன்தினம் (28) தம்பகல்ல பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது புதையல் தோண்டிக்கொண்டிருந்த சந்தேகநபர்கள் இருவர் பூஜைப் பொருட்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தம்பகல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 43 மற்றும் 50 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் தம்பகல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

★★★

## வீதி விபத்தில் ஒருவர் பலி – கண்டி

பேராதனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு – கண்டி பிரதான வீதியில் குஹாகொட சந்திக்கருகில் பேராதனையிலிருந்து கண்டியை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியிலிருந்து விலகி வீதிக்கு அருகிலிருந்த பாதுகாப்பு கொங்கிரீட் தூணில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிள் சாரதி மற்றும் பின்னால் பயணித்துச் சென்ற நபர் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்துள்ளார்.

நயினபானவத்த, புஸல்லாவை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் மரண பரிசோதனைகளின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் பேராதனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# குருக்கள்மடம் ஐயப்பன் சந்நிதானத்தில் மகரஜோதி




(குருக்கள்மடம் செய்தியாளர்)

மட்டக்களப்பு குருக்கள்மடம் ஐயப்பன் சந்நிதானத்தில் மகரஜோதி பெருவிழா ஞாயிற்றுக்கிழமை(29) இடம்பெற்றது. அதிகாலை 5.45 மணிக்கு விசேட வழிபாடுகளுடன் ஆரம்பமாகிய மகரஜோதிவிழாவில் ஐயப்பனுக்கு விசேட அபிஷேகம் இடம்பெற்று 18 படிப்பூசை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

திரு ஆபரணம் எடுத்துவரும் நிகழ்வு, குருக்கள்மடம் செல்லக்கதிர்காம சுவாமி ஆலயத்திலிருந்து குருக்கள் மடம் ஐயப்பன் சந்நிதானம் நடைபவனியாக எடுத்து வரும் நிகழ்வு இடம்பெற்றதைத் தொடர்ந்து வன்புலி வாகனத்தில் எழுந்தருளிய ஐயப்பனுக்கு பக்தி பூர்வமான மகரஜோதி பெருவிழா நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

கலியுக வரதன் ஸ்ரீ ஐயப்பனின் கிரியை பூஜை நிகழ்வுகள் யாவும் தர்மசாஸ்தா புனித மாலை குழு குருசாமி ஜெசிந்திரா குரு தலைமையில், விஸ்வ பிரம்ம ஸ்ரீ செ.சுபேஸ்வரன் குருசுவாமி, ஆலய பிரதம செ. சிவகரன் குழுவினரால் பக்தி பூர்வமாக நடத்தப்பட்டன.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட திருமலை மக்களுக்கு சீன அரசாங்கத்தால் உலருணவுப் பொதி வழங்கல்






(பதுர்தீன் ஷிஹானா)

திருகோணமலை மாவட்டத்தில் சீன அரசாங்கத்தினால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலருணவுப் பொதிகள் நேற்று (29) வழங்கப்பட்டன.

சீனத் தூதுவர் H.E.Qi Zhenhongவால் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் வைத்து குறித்த பொதிகள் வழங்கப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தில் 700 பேருக்கு தலா 6,500 ரூபா பெறுமதியான பொதிகள் வழங்கப்பட்டதுடன் மாவட்ட செயலகத்தில் வைத்து 200 பேருக்கு நேற்று குறித்த பொதிகள் வழங்கப்பட்டன. ஏனையவர்களுக்கு பிரதேச செயலகங்களின் ஊடாக வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் சீனத்தூதுவர் உள்ளிட்ட குழுவினர், அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி, மேலதிக அரசாங்க அதிபர் சுதாகரன், அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் சுகுணதாஸ், ஆளுநரின் செயலாளர் அருள்ராஜ், ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் இராஜசேகர், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் பயனாளிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

# கல்முனை வலய 500 ஆசிரியர்களுக்கு நற்சான்றுப்பத்திரம் வழங்கி கௌரவிப்பு






(மாளிகைக்காடு செய்தியாளர்)

கடந்த 2023ஆம் ஆண்டில் சாதாரண தரப் பரீட்சையில் அதிகூடிய பெறுபேறுகளைப் பெற்று கல்முனை கல்வி வலயம் தேசிய மட்டத்தில் அகில இலங்கை ரீதியில் 2ஆவது இடத்தைப் பெற்றமைக்காக அந்த உயர்வுக்கு காரணமாக அமைந்த ஆசிரியப் பெருந்தகைகளைப் பாராட்டி நற்சான்றுப் பத்திரங்களை வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் தலைமையில் சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் சனிக்கிழமை(28) இடம்பெற்றது.

மாணவர்களின் பல்லின கலை, கலாசார நிகழ்வுகளுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பீ. காப்தீபன் கலந்து கொண்டார்.

கல்முனை கல்வி வலயம் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொள்ளக் காரணமாக அமைந்த 500க்கும் அதிகமான ஆசிரியர்கள், அதிபர்கள், பாட இணைப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள் எனப் பலரும் நற்சான்றுப் பத்திரம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாட இணைப்பாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், வலயக்கல்விப் பணிமனை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



கல்முனை மாநகர சபையின் புதிய ஆணையாளராக ஏ.ரி.எம்.றாபி, கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகரவால் வெள்ளிக்கிழமை (27) நியமிக்கப்பட்டுள்ளார். அக்கரைப்பற்று மாநகர ஆணையாளராகக் கடமையாற்றி வந்த நிலையில் இவருக்கு இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. காத்தான்குடியைச் சேர்ந்த இவர் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளராகவும் பல பிரதேச செயலகங்களில் பிரதேச செயலாளராகவும் பதவி வகித்துள்ளார். (சாய்ந்தமருது செய்தியாளர்)



அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பாலமுனை பிரதேசத்தில் உள்ள ஆஸ்துமா நோயால் அவதிப்படுகின்ற மிக தேவையுடைய வறிய குடும்பம் ஒன்றுக்கு மலசலகூடம் ஒன்றை அமைப்பதற்கு ஐகோனிக் யூத்ஸ் அமைப்பினால் முதற்கட்டமாக 90,000 ரூபா பணம் சனிக்கிழமை (28) உரிய பயனாளியிடம் அமைப்பின் தலைவர் முஹம்மட் தில்ஷானின் வழிகாட்டலில் வழங்கப்பட்டது. (மீரா நகர் செய்தியாளர்)




கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் 75 ஆவது ஆண்டை முன்னிட்டு பாடசாலைக்கு பஸ் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக பாடசாலை பழைய மாணவர்களான ஸஹிரியன்ஸ் லயன்ஸ் 2003 - 2006 பிரிவினர் 08 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையை பாடசாலை அதிபர் எம்.ஐ.ஜாபிரிடம் சனிக்கிழமை(28) கையளித்தனர். இதன்போது பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளர் என்.எம்.றிஸ்மிர், பாடசாலை அபிவிருத்திச் சங்க உதவிச் செயலாளர் எம்.ஐ.எம். றியாஸ் உட்படப் பிரதி, உதவி அதிபர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (பொலிவேரியன் செய்தியாளர்)



திருகோணமலை சிங்கள மகா வித்தியாலயத்தில் கலாசார அமைச்சினால் அண்மையில் நடத்தப்பட்ட தேசிய மட்ட கலாசாரப் போட்டியில் கல்முனை ஸாஹிரா கல்லூரி (தேசிய பாடசாலை) ரபான் நிகழ்ச்சியில் இரண்டாம் இடத்தைப் பெற்று கல்லூரிக்கும் பிரதேசத்துக்கும் பெருமை தேடித் தந்துள்ளனர். இப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களையும் மாணவர்களை வழிப்படுத்தி பயிற்றுவித்த ஆசிரியர் எம்.ஐ.எம்.அமீரையும் கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபீர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் மகிழ்ச்சியுடன் வரவேற்று பாராட்டிக் கௌரவித்தனர். (மாளிகைக்காடு செய்தியாளர்)

# ஒரு மோட்டார் சைக்கிளில் இருவர் பயணித்தல் நல்லது

## நிந்தவூர் பொலிஸார் அறிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

நிந்தவூர் பிரதேசத்தில் அண்மைக்காலமாக வீதி விபத்துகள் அதிகரித்து வருவதால் பின்வரும் நடைமுறைகளை கட்டாயம் பின்பற்றுமாறு நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒரு மோட்டார் சைக்கிளில் இரண்டுக்கு மேற்பட்டவர்கள் பயணம் செய்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. எனவே இதனை கருத்தில் கொண்டு கட்டாயம் இரண்டு பேருக்கு மேல் மோட்டார் சைக்கிளில் பயணிப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

சிறுபராயத்தினர் மற்றும் முறையான சாரதி அனுமதிப் பத்திரம் அற்றவர்களுக்கு மோட்டார் சைக்கிளை ஓட்டுவதற்கு வழங்குகின்றவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது. மற்றும் தலைக்கவசம் இன்றியும் அதிக வேகத்துடனும் மோட்டார் சைக்கிளை ஓட்டி செல்வதை முற்றாக தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுள்ளார்.



திருகோணமலை கிண்ணியாவைச் சேர்ந்த ஊடகவியலாளர் எம்.ஏ.முகமட்டின் சேவையைப் பாராட்டி அண்மையில் (25) ஊடக விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார். திருகோணமலை மீடியா போரத்தின் ஏற்பாட்டில் கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் அதன் தலைவர் எச்.எம்.ஹலால்தீன் தலைமையில் இடம்பெற்ற விருது வழங்கும் நிகழ்வில் கிண்ணியா நகர சபையின் செயலாளர் எம்.கே.எம்.அனிஸ், சட்டத்தரணி எம்.பி.எம்.பௌமி ஆகியோர் இணைந்து இவருக்கு பொன்னாடை போர்த்தி, நினைவுக் கேடயம் மற்றும் சான்றிதழை வழங்கி கௌரவித்தனர். (தம்பலகாமம் செய்தியாளர்)



இலங்கை சமாதான கற்கைகளுக்கான நிலையப் பணிப்பாளரும் அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத் தலைவருமான கலாநிதி எஸ்.எல்.ரியாஸ் எழுதிய நூல் அறிமுகம் அட்டாளைச்சேனை லொயிட்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றது. மாவட்ட சாரணர் சங்கத்தின் ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெப்பை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கலாநிதி றியாஸினால் கடந்த 20 ஆண்டுகளாக எழுதப்பட்ட 'நேர்முகப் பரீட்சையின் நுட்பங்கள்' எனும் 40 நூல்களை அறிமுகம் செய்து வைத்து சங்கத்தின் உயர் சபையினருக்கு வழங்கி வைத்தார். (கோணாவத்தை செய்தியாளர்)



*கல்முனை பிரதம தபாலகத்தில் 36 வருட காலம் தபால் சேவகராக கண்ணியமாக சேவையாற்றி அரச சேவையிலிருந்து இளைப்பாறிய பெரியதம்பி தவராசாவுக்கான சேவை நலன் பாராட்டு விழா நேற்று (29) கல்முனை பிரதம தபாலகத்தில் பிரதம தபால் அதிபர் ஏ.அஹமட் லெப்பை தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தபால் சேவகர் தெ.ஜீவராசா, தபாலக காசாளர் எஸ்.எல்.காலித் ஆகியோர் விழா நாயகனை மாலை அணிவித்து கௌரவித்தனர். இந்நிகழ்வில் விழா நாயகனின் துணைவியார் மற்றும் பிள்ளைகள் கலந்து கொண்டனர். (எருவில் செய்தியாளர்)*



கிளீன் ஸ்ரீலங்கா - 2025 ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்துக்கமைவாக பெரண்டினா நிறுவனமும் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபையும் இணைந்து வெள்ளிக்கிழமை(27) களுவாஞ்சிக்குடி பொதுச்சந்தையில் பிளாஸ்ரிக் கழிவுகள் சேகரிக்கும் இரும்புக் கூடாரமொன்றை பொதுமக்கள் பாவனைக்காக வைத்துள்ளது. இந்நிகழ்வுக்கு பெரண்டினா ஊழியர்கள், பிரதேச சபை ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (பாறுக் ஷிஹான்)




சம்மாந்துறை ட்ரைலிங் பாலர் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பும் விடுகை விழாவும் சம்மாந்துறை அல்-அர்ஷத் வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் அண்மையில் (24) நடைபெற்றன. இந்நிகழ்வில் சமூக சேவையாளரும் விஞ்ஞான முதுமாணியுமான அஸ்மி யாஸின் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கிவைத்தார். மேலும் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் பாலர் பாடசாலை ஆசிரிய ஆலோசகர் இஸட்.எம்.றிஸ்வி கலந்துகொண்டார். (அகீல் சிஹாப்)




மறைந்த சினிமா நடிகர் பத்ம பூஷண் விஜயகாந்தின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி விசேட நினைவு தினம் மட்டக்களப்பு செங்கலடி பிரதேசத்தில் நடைபெற்றது. அக்னி இசைக்குழு, சமூக சேவை மற்றும் விளையாட்டு மன்றத்தின் தலைவர் ரகுபரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மதகுருக்கள் பலர் கலந்துகொண்டனர். இதன்போது மறைந்த சினிமா நடிகர் விஜயகாந்தின் சிறப்பு பற்றி பலர் இங்கு கருத்துத் தெரிவித்ததுடன் ஏழைக்குடும்பங்களுக்கு பெறுமதியான பொருட்களையும் உள்ளடக்கிய உலருணவுப்பொதிகள் கையளிக்கப்பட்டன. (ஏறாவூர் செய்தியாளர்)

# காத்தான்குடியில் வேகமாகப் பரவும் டெங்கு: 30 பேர் பாதிப்பு

## 300 வீடுகளில் பரிசோதனை



(காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)

மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேசத்தில் டெங்கு நோயினால் 30 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யூ.எல்.நஸீர்தீன் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பிரதேசங்களில் நேற்று பாரிய டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பல இடங்களில் குடம்பிகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ். முரளீஸ்வரனின் வழிகாட்டலில் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வேகமாக டெங்கு நோய் பரவி வருவதனால் அவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இப்பாரிய வேலைத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டதாக சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யூ.எல்.நஸீர்தீன் தெரிவித்தார்.

காத்தான்குடி நகர சபை பிரதேசத்துக்குட்பட்ட புதிய காத்தான்குடி உட்பட பல்வேறு இடங்களில் 15 பிரிவுகளாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பிரிக்கப்பட்டு தொண்டர் நிறுவனங்கள் மற்றும் சுகாதார அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இப்பாரிய டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பருவமழை ஆரம்பித்திருப்பதால் மாவட்டத்தில் மேலும் பெருமளவில் டெங்கு பரவும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

# தாக்கப்பட்ட ஊடகருக்கு நீதி பெற்றுக்கொடுக்க இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## மட்டு. ஊடக அமையம் கண்டனம்

(வீரமுனை செய்தியாளர்)

கிளிநொச்சியில் ஊடகவியலாளரைக் கடத்த முற்பட்டதுடன் அவர்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை வன்மையாகக் கண்டிப்பதாகவும் இதுவரையில் தாக்குதல் மேற்கொண்டவர்கள் கைதுசெய்யப்படாமையையிட்டு வன்மையான கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம் என மட்டு.ஊடக அமையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மட்டு.ஊடக அமையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிளிநொச்சி அலுவலகமொன்றில் கடமை புரியும் ஊடகவியலாளரும் கிளிநொச்சி ஊடக அமையத்தின் செயலாளருமான முருகையா தமிழ்ச்செல்வன் டிசம்பர் 26 தனது கடமையை முடித்து வீடுதிரும்பிக்கொண்டிருந்தபோது கறுப்பு நிற வாகனத்தில் வந்த இருவர் அவரைக் கடத்திச்செல்ல முற்பட்ட நிலையில், முயற்சி தோல்வியடைந்ததையடுத்து அவரைத் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

புதிய ஆட்சியொன்று இந்த நாட்டைப் பொறுப்பேற்றுள்ள நிலையில், ஊடக சுதந்திரம் தொடர்பிலும் அச்சுறுத்தல்கள் தொடர்பிலும் மக்கள் மாற்றமொன்றை எதிர்பார்த்திருந்த சூழ்நிலையில் இவ்வாறான சம்பவமொன்று நடைபெற்றுள்ளமையானது இந்த நாட்டில் இதுவரையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லையென்பதை வெளிப்படுத்தியுள்ளது.

குறிப்பாக, வடக்கு,கிழக்கில் தமிழ் ஊடகவியலாளர்களுக்கான அச்சுறுத்தல்கள் தொடர்ச்சியாக இருந்து வருகின்றன. பல்வேறு வழிகளிலும் கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர். இது தொடர்பில் கடந்த காலத்தில் மட்டு.ஊடக அமையம் போராட்டங்களை முன்னெடுத்ததுடன் அது தொடர்பான அறிக்கைகளையும் வெளியிட்டிருந்தது.

இந்நிலையில், தற்போதும் அதேபோன்ற சூழ்நிலையே வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் ஊடகவியலாளர்களுக்கு உள்ளது என்பதையே இந்தத் தாக்குதல் நிகழ்வு வெளிப்படுத்தியுள்ளது. ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகத் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் மக்கள் பாதிப்புகள் மற்றும் முறைகேடுகளை வெளிப்படுத்துவதற்குமான சுதந்திரம் மறுக்கப்படுமானால் அது இந்த நாட்டின் ஜனநாயகத்தின் மீதான கேள்வித்தன்மையையே வெளிப்படுத்தி நிற்கும்.

எனவே, தாக்குதலுக்குள்ளான ஊடகவியலாளருக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க இலங்கை அரசாங்கம் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்பதுடன் அவரின் பாதுகாப்பு தொடர்பிலும் கரிசனைகொள்ளவேண்டும்.

குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் என்பதுடன் கடந்த காலத்தில் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கும் இந்த வேளையில் நாங்கள் நீதி கோருகின்றோம். மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை வன்மையாகக் கண்டிப்பதுடன் இதுவரையில் தாக்குதல் மேற்கொண்டவர்கள் கைதுசெய்யப்படாமையையிட்டு வன்மையான கண்டனங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

# சட்டதிட்டங்களுக்கேற்பவே ஊழல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்

## பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா



(வீரமுனை செய்தியாளர்)

''எமது அரசாங்கம் எந்த அரசியல் பழிவாங்கலையும் முன்னெடுக்காது. ஊழல்களை மேற்கொண்டவர்களுக்கு எதிராக இலங்கையின் சட்டதிட்டங்களுக்கேற்ப நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. சட்டத்தின் மூலம் மட்டுமே நாங்கள் ஊழல்களுக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுப்போம்'' - என வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரதியமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான அருண் ஹேமச்சந்திரா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.பிரபுவின் வேண்டுகோளுக்கமைவாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்ட பிரதியமைச்சர் வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி க.கலாரஞ்சனியின் ஏற்பாட்டில் விசேட கலந்துரையாடலிலும் கலந்துகொண்டார்.

இக்கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.பிரபு, வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் மைதிலி, பிரதியமைச்சரின் இணைப்புச்செயலாளர், வைத்தியசாலையின் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது வைத்தியசாலையின் தற்போதைய நிலைமை தொடர்பிலும் தேவைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகள், அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன், வைத்தியசாலையில் முன்னெடுக்கப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன் வைத்தியசாலைக்கு மிகத் தேவைப்பாடான விடயங்களைப் பெற்றுக்கொடுப்பது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

கலந்துரையாடல்களைத் தொடர்ந்து வைத்தியசாலையின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்ட பிரதியமைச்சர் குழுவினர் வைத்தியசாலையில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப்பணிகளையும் பார்வையிட்டனர்.

# பொலிஸ் அதிகாரியை விசாரணையின்போது தாக்கிய ஐவர் கைது

(பாறுக் ஷிஹான்)

விசாரணை மேற்கொண்டிருந்த பொலிஸ் அதிகாரியை குழுவாக இணைந்து தாக்கிய சந்தேக நபர்களை பெரியநீலாவணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு-திருவள்ளுவர் வீதியில் இடம்பெற்ற இரு சாரார்களுக்கிடையில் ஏற்பட்ட முறுகல் தொடர்பில் வெள்ளிக்கிழமை(27) விசாரணை மேற்கொண்டிருந்த பொலிஸ் அதிகாரி மீது குறித்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இத்தாக்குதலினால் நிலைகுலைந்த குறித்த பொலிஸ் அதிகாரி காயமடைந்த நிலையில் மருதமுனை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பல்வேறு குற்றத்தடுப்புப் பிரிவில் கடந்த வியாழக்கிழமை(26) முறைப்பாடொன்று வழங்கப்பட்டிருந்தது. வழமைபோன்று அம்முறைப்பாட்டை ஆராய இரு தரப்பினரை வரவழைத்த பொலிஸ் அதிகாரி விசாரணை விடயங்களை ஆராய்ந்து கொண்டிருந்தார்.

குறித்த விசாரணை இடம்பெற்றுக் கொண்டிருந்த போது முறைப்பாட்டாளர் பக்கமாக நின்ற பெண் திடீரென தனது செருப்பைக் கழற்றி மறுமுனையில் இருந்த எதிராளியை நோக்கி பல முறை தாக்கியுள்ளார். இதன் போது உடனடியாக செயற்பட்ட அப்பொலிஸ் அதிகாரி குறித்த தாக்குதலை நிறுத்துமாறு கோரி சமரசப்படுத்த முயற்சித்துள்ளார்.

இந்நிலையில், பொலிஸ் அதிகாரியை திடீரென குழுவாக இணைந்து பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைக்காக அழைக்கப்பட்டவர்கள் தாக்கியுள்ளனர். இதன்போது சற்றும் எதிர்பார்க்காத குறித்த பொலிஸ் அதிகாரி காயமடைந்த நிலையில் அருகிலுள்ள மருதமுனை பிரதேச வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

மேலும் இத்தாக்குதலில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் அடிப்படையில் பெண் மற்றும் ஆண் சந்தேக நபர்கள் 05 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் கடமைக்கு இடையூறு செய்தமை, சமாதானத்துக்கு குந்தகம் விளைவித்தமை, வன்முறையை தூண்டியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் எஞ்சிய சந்தேக நபர்களைக் கைது செய்ய பெரியநீலாவணை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல். புத்திக மேற்கொண்டுள்ளார்.

# பெண் தலைமை தாங்கும் குடும்பப் பெண்களால் முன்னெடுக்கப்பட்ட Bridge Market தீக்கிரை

(மட்டக்களப்பு)



கல்லடி பழைய பாலத்தில் பெண் தலைமை தாங்கும் குடும்பப் பெண்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் Bridge Market சனிக்கிழமை (28) இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நஞ்சற்ற உணவு வகைகளை விற்பனை செய்யும் ஒரு சந்தையாகக் காணப்பட்ட இச்சந்தையில் சுமார் 12 வருடங்களாக 30 பெண் தலைமை தாங்கும் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் தமது வாழ்வாதாரத்துக்காக நாளாந்தம் மரக்கறி, அரிசி, அரிசி மா, தேன், நெய், கருவாடு போன்ற மேலும் பல உள்ளூர் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து தமது வாழ்வாதாரத்தை ஈட்டிவந்த நிலையிலேயே இந்நாசகார செயல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாளாந்தம் காலை 07 மணிமுதல் பி.ப. 02 மணிவரை வியாபார நடவடிக்கையில் இவர்கள் ஈடுபடுவதுடன், அதனைத் தொடர்ந்து பிற்பகல் வேளையில் குறித்த பகுதியில் மரக்கறி, பழவகை போன்ற பொருட்களை வெளியிடத்து வியாபாரிகள் வியாபாரம் செய்து வருகின்றனர்.

சம்பவதினம் நள்ளிரவு குறித்த நாசகார செயலில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் மனநலம் பாதிக்கப்பட்டவராகச் சொல்லப்படும் நபரொருவரை மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் விசாரணைகளுக்காக அழைத்துச் சென்றுள்ளதாக மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த சில மாதங்களாக குறித்த சந்தைக்கு அருகாமையிலிருந்த பொலிஸ் காவலரணிலிருந்த பொலிஸாரின் கடமை நிறுத்தப்பட்டதன் பின்னர் குறித்த பகுதியில் குற்றச் செயல்களும் போதைப்பொருள் பாவனையாளர்களின் நடமாட்டமும் அதிகரித்திருந்ததாக அப்பகுதியில் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை தொடக்கம் வெல்லாவெளி வரையான பகுதிகளிலிருந்து தமது வாழ்வாதாரத்தை ஈட்டுவதற்காக நாளாந்தம் போக்குவரத்துக்காக அதிக செலவை மேற்கொண்டு மட்டக்களப்பு நகரிலுள்ள மக்களுக்கு நஞ்சற்ற உணவுப் பொருட்களை சேவை மனப்பான்மையுடன் குறைந்த விலையில் விற்பனை செய்துவரும் இவர்கள் தமக்கான நீதி பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

# சாய்ந்தமருது கடற்கரைப் பூங்கா புனரமைப்பு தரம் குறித்து ஆராய்வு



(சாய்ந்தமருது செய்தியாளர்)

கல்முனை மாநகர சபையினால் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்ற சாய்ந்தமருது கடற்கரைப் பூங்காவுக்கு கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் வெள்ளிக்கிழமை (27) கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது அங்கு முன்னெடுக்கப்படும் புனரமைப்புப் பணிகளை மீளாய்வு செய்த அவர், அவற்றின் தரம் குறித்து கூடிய அவதானம் செலுத்தியதுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் அதிகாரிகள் மற்றும் ஒப்பந்த நிறுவன முகாமையாளருடன் ஆலோசனைகளைப் பரிமாறிக் கொண்டார்.

சிறுவர்களின் விளையாட்டரங்காகவும் பெண்கள் உள்ளிட்ட பொது மக்களின் பொழுதுபோக்குமிடமாகவும் காணப்படுகின்ற இந்தப் பூங்காவின் அனைத்து கட்டுமானங்களும் சூழலும் மிகவும் பாதுகாப்பானவையாகவும் தரமானவையாகவும் அமையப்பெற வேண்டுமென்று ஆணையாளர் நௌபீஸ் இதன்போது அறிவுறுத்தினார். புனரமைப்பு வேலைத்திட்டத்தை இன்னும் துரிதமாக முன்னெடுத்து, கூடிய விரைவில் முடிவுறுத்துமாறும் அவர் வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீம், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.எம். நுஸைர் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

# கல்முனை ஸ்ரீ சுபத்ராராம மகா விகாரை அன்னதான மண்டபம் திறப்பு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸின் D-100 திட்டத்தினூடாக ஜனாதிபதி செயலகத்தின் விசேட நிதியொதுக்கீட்டின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட கல்முனை ஸ்ரீ சுபத்ராராம மகா விகாரையின் அன்னதான மண்டப திறப்பு விழா சனிக்கிழமை(28) கல்முனை பிரதேச செயலாளர் டி.எம்.எம். அன்சார் தலைமையில் இடம்பெற்றது.

கல்முனை ஸ்ரீ சுபத்ராராம மகா விகாரையின் விகாராதிபதி ரன்முத்துகல சங்கரத்ன தேரர், மாணிக்கமடு ரஜமகா விகாரையின் விகாராதிபதி சீலாரத்தன தேரர் ஆகியோரின் பிரசன்னத்துடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம கலந்துகொண்டு விகாரையின் அன்னதான மண்டபத்தைத் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் கௌரவ அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபா, அம்பாறை மாவட்டப் பிரதம பொறியியலாளர் ஏ.எம்.சாஹிர், கல்முனை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான எஸ்.விஜிகரன், கே.எல்.சபீக் ஆகியோரும் கலந்து கொண்டனர். சுமார் 05 மில்லியன் ரூபா நிதியில் இந்த அன்னதானக் கட்டிடம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உயிருக்குப் போராடும் யானை



(கல்குடா செய்தியாளர்)

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் வயல் பகுதியில் நோயினால் பாதிக்கப்பட்ட யானை யொன்று உயிருக்குப் போராடி வருவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

நேற்று அதிகாலை ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் அடம்படிவட்டுவான் பகுதியில் விவசாயி ஒருவரது வயல் பிரதேசத்தில் குறித்த யானை எழுந்து நடக்கமுடியாத நிலையில் உள்ளதுடன் அப்பகுதி விவசாய நிலங்களையும் சேதப்படுத்தியுள்ளது.

கிரான் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறித்த யானையை பார்வையிட்டதுடன் அதற்கான முதலுதவிகளை வழங்கினர். இந்த யானையின் நிலைவரம் தொடர்பாக அம்பாறை வனஜீவராசிகள் திணைக்கள வைத்தியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

குறித்த யானை பத்து வயது தொடக்கம் பதினைந்து வயதுக்குள் இருக்கலாம் என்று வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் கணிக்கப்பட்டுள்ளது. வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுடன் கல்குடா அனர்த்த அவசர உதவிச்சேவை மற்றும் அகீல் அவசர உதவிப் பிரிவு உறுப்பினர்கள் உதவிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐஸ் போதைப்பொருளுடன் கைதானவரிடம் விசாரணை

(பாறுக் ஷிஹான்)

ஐஸ் போதைப்பொருளுடன் கைதான இளைஞனிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரைப் பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் இளைஞன் சனிக்கிழமை (28) இரவு களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது நிந்தவூர் 07 பகுதியைச் சேர்ந்த 25 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறு கைதான சந்தேகநபரிடமிருந்து 2 கிராம் 580 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டிருந்ததுடன் சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப்பொருட்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக நிந்தவூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மற்றும் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்லடியில் 'மாண்புடன் கூடிய மாதவிடாய்' எண்ணக்கருவைப் பரவலாக்கும் நிகழ்ச்சி



(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பில் சர்வதேச மாண்புடன் கூடிய மாதவிடாய் எண்ணக்கருவைப் பரவலாக்கும் நிகழ்வானது விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் நிகழ்ச்சித்திட்ட அதிகாரி இந்துமதி ஹரிகரதாமோதரன் தலைமையில் கல்லடி விபுலாநந்தர் வயோதிபர் இல்ல மண்டபத்தில் சனிக்கிழமை (28) இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து சிறப்பித்தார்.

மாண்புடன் கூடிய மாதவிடாய் எண்ணக் கருவை பரவலாக்குவதனூடாக எதிர்வரும் காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இளவயது திருமணம், பாலியல் சிறுவர் துஷ்பிரயோகங்கள், போதைப்பொருள் பாவனை போன்ற சமூக நலிவுச் செயற்பாடுகளைக் குறைக்கும் நோக்கில் விழுது நிறுவனத்தினால் பல செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்போது பாடசாலை மாணவிகள் மற்றும் தொழில் புரியும் மாதர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டதுடன் பெண்களுக்கான சுகாதார விழிப்பு ணர்வு, சிறுபராய திருமணத்தால் ஏற்படும் பாதிப்புகள் போன்ற பல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் புதிதாக அறிமுகம் செய்து வைக்கப்பட்ட மீள்பாவிப்புக்குரிய அணையாடை (Pad) தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் பிரசாந்தி, ஆசிரியர்கள், பொலிஸார், பொதுச் சுகாதார மருத்துவமாது, சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், விழுது ஆற்றல் மேம்பாட்டு மைய நிர்வாக உத்தியோகத்தர் கந்தன் நிர்மலா, விழுது உத்தியோகத்தர் பி.முரளிதரன் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பாடசாலை செல்லாத - இடை விலகிய மாணவர்களைத்தேடி விசேட வேலைத்திட்டம்

## கம்பஹா கல்வி உப குழுக் கூட்டத்தில் தீர்மானம்



கஹட்டோவிட்ட

பாடசாலை செல்லாத மற்றும் இடை விலகிய மாணவர்களை பாடசாலைகளில் சேர்ப்பதற்கான உடனடி வேலைத்திட்டமொன்றை உருவாக்குதல் தொடர்பிலும் கம்பஹா மாவட்ட கல்வி உப குழுக்கூட்டத்தில் கவனஞ்செலுத்தப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்ட கல்வி உப குழுக்கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பிரதியமைச்சருமான மஹிந்த ஜயசிங்க தலைமையில் கம்பஹா மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டத்திலுள்ள கல்வி வலயங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

வலயக்கல்வி அலுவலகங்களில் நிலவும் வெற்றிடங்கள் மற்றும் பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகள் தொடர்பில் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் கருத்துகளை முன்வைத்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த கம்பஹா மாவட்ட செயலாளர் லலிந்த கமகே, பாடசாலை மாணவர்களின் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில் அடுத்த ஆண்டு முதல் தரம் 09, 10 மற்றும் 11 ஆகிய மாணவர்களுக்கு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ருவன் மாபலகம, தர்மபிரிய விஜேசிங்க, மாவட்ட செயலாளர் லலிந்த கமகே, மேலதிக செயலாளர் கித்சிறி, மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் சமந்தா சேனாநாயக்க, வலயக்கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# வெளிநாட்டில் தொழில் புரிபவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்





பு.கஜிந்தன்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டில் தொழில் பணிபுரியும், பணிபுரிந்தவர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில்கள் வழங்கும் நிகழ்வு மாகாண சிரேஷ்ட முகாமையாளர் திருமதி எல். லக்சாயினி தலைமையில் நேற்று முன்தினம் (28) மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில்,


''வெளிநாட்டில் தொழில்புரிபவர்களால் நாட்டுக்கு அந்நிய செலாவணி கிடைத்துவருகிறது. வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டுக்கு வேலைக்குச் செல்வதற்கான விழிப்புணர்வுகள் அதிகம் அவசியமாக இருக்கிறது. தந்தை அல்லது தாய் தொழில் நிமித்தம் வெளிநாடு சென்ற நிலையில் அவர்களின் பிள்ளைகள் தமது கல்வியில் ஆர்வம் காட்டி கற்று நல்ல தேர்ச்சி பெற்றமையையிட்டு பிள்ளைகளையும் அவர்களின் பெற்றோர்களையும் பாராட்ட வேண்டும்.

மேலும், இப்போட்டி நிறைந்த கல்விச் சூழலில் விடாமுயற்சியாக கற்று உயர்வடைய வேண்டும். வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் வழங்கப்படும் கல்விக்கான உதவியானது ஓர் ஊக்கப்படுத்தலாகும். அந்த வகையில் தரம் 05 புலமைப்பரிசில் (25,000/=) பரீட்சை, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் (30,000/=) மற்றும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை (35,000/=) ஆகியவற்றில் அதி உயர் சித்தியடைந்த 26 மாணவர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் 98 மாணவர்களுக்கான ரூபா 10,000 பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வழங்கல் என்பன மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கத் துணை நிற்கும். மேலதிக தேவைப்பாடுகளுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் என்றும் மாணவர்களுக்கு துணை நிற்கும். மாணவர்களின் எதிர்கால ஒளிமயமான வாழ்க் கைக்கு தமது வாழ்த்துகளையும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்துக்கான பொறுப்பதிகாரி ரி. கோடீஸ்வரன், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் மாவட்ட இணைப்பாளர் தி. பிராங்கிளின், பணியக உத்தியோகத்தர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டார்கள்.

# நுவரெலியாவில் அதிகரிக்கும் மட்டக்குதிரைகளின் நடமாட்டம்

## தாக்குதலுக்குள்ளாகிய சிறுவன் வைத்தியசாலையில் அனுமதி





நானுஓயா நிருபர்

நுவரெலியா கிரகரி வாவிக் கரையோரத்தில் நேற்று முன்தினம் (28) சிறுவனொருவர் மட்டக்குதிரை தாக்கியதில் காயங்களுக்குள்ளான நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

சுற்றுலா பயணத்தை மேற்கொண்ட உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் கிரகரி வாவி கரையோர வீதியில் நடந்துகொண்டிருந்தபோதே, சவாரிக்காக கொண்டுசெல்லப்பட்ட மட்டக்குதிரை ஒன்று திடீரென சிறுவனைத் தாக்கி காயப்படுத்தியதாக குடும்பத்தினர் தெரிவித்தனர்.

அதன் பின்னர் குறித்த பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த நுவரெலியா பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களிடம் முறைப்பாடு செய்து சிறுவனைத் தாக்கிய மட்டக்குதிரையின் உரிமையாளர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நுவரெலியாவில் மட்டக்குதிரைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் அவை சுற்றுலாப் பயணிகளுக்கு தொடர்ந்து இடையூறு ஏற்படுத்தி வருவதாகவும் கூறப்படுகிறது. இதன் காரணமாக நுவரெலியாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் பெரும் சிக்கல்களைச் சந்திக்கின்றனர்.

எனவே, இவ்வாறு வீதிகளில் சுற்றித்திரியும் மட்டக்குதிரைகளை அப்புறப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதுடன் இப்பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்து மட்டக்குதிரை வளர்ப்போருக்கு உரிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதையும் மீறும் பட்சத்தில் மட்டக்குதிரையை பறிமுதல் செய்து அதிகரித்த தண்டப்பணத்தை விதிக்கவேண்டுமென பொதுமக்களும் வாகனச் சாரதிகளும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் நால்வர் கைது

அநுராதபுரம் நிருபர்

புதையல் தோண்டிய சந்தேகத்தின் பேரில் நால்வர் பொலனறுவை வலய குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வலய குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸாரினால் நேற்று முன்தினம் (28) பொலனறுவை புதிய நகர்ப் பகுதியில் அமைந்துள்ள தொல்பொருள் பெறுமதிமிக்க பகுதியொன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதற்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் மற்றும் பூஜைப் பொருட்களையும் கைப்பற்றிய பொலிஸார், குறித்த நபர்கள் 33 வயதுக்கும் 69 வயதுக்குமிடைப்பட்ட பொலனறுவை பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலனறுவை வலய குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற நிலையில், சந்தேக நபர்களை பொலனறுவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

# உத்தேச மின்கட்டணத் திருத்தம்:

## மக்களின் கருத்துக்கணிப்புக்கான முதலாவது நிகழ்ச்சித் திட்டம் இன்று

எம்.ஏ.அமீனுல்லா

மின்சாரக் கட்டணம் தொடர்பில் மின்சார சபை முன்மொழிந்துள்ள திருத்தங்கள் மற்றும் அது தொடர்பில் மின்சாரப் பாவனையாளர்களின் ஆலோசனைகள் அடங்கிய அறிக்கை தொடர்பான மாகாண மட்டத்தில் பொதுமக்களின் கலந்தாய்வுக்கான முதலாவது நிகழ்ச்சித் திட்டம் மத்திய மாகாணத்தில் அண்மையில் ஆரம்பமான நிலையில், ஊவா மாகாணத்தில் பொது கலந்தாய்வு இன்று (30) நடைபெறவுள்ளது.

உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டணம் தொடர்பில் மின்சார சபை முன்மொழிந்துள்ள திருத்தங்கள் மற்றும் அது தொடர்பில் மின்சாரப் பாவனையாளர்களின் ஆலோசனைகள் அடங்கிய அறிக்கை ஜனவரி 17ஆம் திகதி பகிரங்கப்படுத்தப்படுமென இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பணிப்பாளர் நாயகம் தமித குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனவரி 10ஆம் திகதிவரை மாகாண மட்டத்தில் மக்கள் கருத்துக்கணிப்பு நடத்தப்படுமெனவும் மாகாண மட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் அனைத்து மக்களின் கருத்துகளையும் பரிசீலித்து உரிய அறிக்கை வெளியிடப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

மின்சார சபையினால் 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அறிவிக்கப்படவுள்ள மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பான மத்திய மாகாண பங்குதாரர்களின் ஆலோசனை வழங்கும் நடவடிக்கை கண்டி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போதே பணிப்பாளர் நாயகம் இதனைத் தெரிவித்தார்.

மத்திய மாகாண மின்சார நுகர்வோர் உட்பட 60 பங்குதாரர்கள் மின்சாரக் கட்டணத் திருத்தத்தின் போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்களை முன்வைத்திருந்தனர்.

மின்சாரப் பணிமனை டிசம்பர் 06 ஆம் திகதி, ஜனவரி மாதம் முதல் திருத்தப்படவுள்ள மின் கட்டணத் திருத்தங்கள் குறித்து பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு தெரிவித்த நிலையில், பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு மாகாண மட்டத்தில் மின்சார நுகர்வோரின் கருத்துகளை ஆராயத் தொடங்கியது.

அதன்படி, உத்தேச மின் கட்டணத் திருத்தம் தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்துபூர்வ கருத்துகளை மின்சாரப் பணிமனை டிசம்பர் 17ஆம் திகதி கேட்கத் தொடங்கியது. வாய்வழி கருத்துகளைப் பெறுவதற்கான முதலாவது சந்தர்ப்பம் டிசம்பர் 10ஆம் திகதி கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது.

மேலும் சப்ரகமுவ மாகாண நிகழ்ச்சி ஜனவரி 03ஆம் திகதியும் தெற்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் ஜனவரி 4ஆம் திகதியும் வடமத்திய மாகாணத்தில் ஜனவரி 5ஆம் திகதியும் மக்கள் கருத்துக் கணிப்பு நடத்தப்படும் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. அதுபோன்று வடமாகாணத்தில் ஜனவரி 06ஆம் திகதியும் ஜனவரி 08ஆம் திகதி கிழக்கு மாகாண மக்கள் கருத்துக்கணிப்பும் நடத்தப்படவுள்ளது.

இறுதி வாக்கெடுப்பு ஜனவரி 10ஆம் திகதி மேல் மாகாணத்தை மையமாக வைத்து நடத்தப்படும்.




**மாவனெல்லை, மஹவத்தை எக்ஸ்போர்ட் பாலர் பாடசாலையின் வருடாந்த கலைநிகழ்ச்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் ஆசிரியை ஆமிலா நிலார் தலைமையில் மாவனெல்லை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றன. மனோதத்துவ ஆலோசனை நிபுணர் அஸ்ஹர் அன்சார் பிரதம அதிதியாகவும் வைத்தியர் ஏ.ஜீ.எவ்.பர்ஹானா அதிதியாகவும் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் சிறார்களின் பல நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.**

**படங்கள்:** *மாவனெல்லை செய்தியாளர்*

# திமிங்கில அம்பரை சட்டவிரோதமாக விற்பனை செய்த இருவர் கைது



ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - கருவலகஸ்வெவ, நிக்கவெரட்டிய வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் மற்றும் கிரியுல்ல பொலிஸாரும் இணைந்து அண்மையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது திமிங்கிலத்தின் அம்பரை விற்பனை செய்ய முற்பட்டபோது இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வனஜீவராசித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.


விமானப் படையின் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் பேரில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து இரண்டு கிலோ கிராம் அம்பரை கொள்வனவு செய்வதற்காக முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளின்போது அதிகாரிகளின் மூலம் 150 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முற்பட்டபோது அந்த இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

புத்தளம் - தல்கஸ்கந்த பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும் கிரியுள்ள வெல்லவ பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருமே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

# ஈழத்தின் இலக்கியப் பேராளுமை யோகேந்திரநாதன் காலமானார்

## மறைவுக்கு சிறிதரன் எம்.பி. அனுதாபம்



ஈழ மண்ணின் மூத்த படைப்பிலக்கியவாதியும் கிளிநொச்சி மண்ணுக்கு அடையாளம் தந்தவருமாகிய நா.யோகேந்திரநாதன் ஐயா மறைந்தார் என்ற செய்தி மனதை நொருங்கச் செய்திருப்பதாக பாராளுமன்ற உறுப் பினர் சிவஞானம் சிறிதரன் அவரது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரின் அனுதாபச் செய்தியில் மேலும்,

அகவை மூப்பையும் அதனால் அவர் உற்றிருந்த நோய் உபாதைகளையும் கடந்தும் தமிழ்த் தேசியப் பயணப் பாதைகளை தன் படைப்புகளூடாக வெளிக்கொணர வேண்டுமென்ற பேரவாவில் எழுத்துலகில் இயங்கிக்கொண்டே இருந்த ஈழத்தின் புகழ்பூத்த பேராளுமையான அவர், ஈழவிடுதலைப் போர் குறித்த அனுபவங்களையும் ஆதாரங்களையும் தன்னகத்தே கொண்டிருந்த ஈழத்தின் அடையாள மனிதனாகவுமே இறுதிவரை இருந்தார்.

போராட்ட காலத்தில் புலிகளின் குரல் வானொலியில் ஒலிபரப்பான நா.யோகேந்திரநாதனின் உயிர்த்தெழுகை நாடகம் ஈழ உணர்வாளர்கள் மத்தியில் அவருக்கான இடத்தை மேலுயர்த்தி, எமது மக்களின் உணர்வுகளில் நிறைந்த மனிதனாக அவரை மாற்றியிருந்தது.

இன விடுதலை என்ற சத்திய இலட்சியத்தை தன் இதயத்தே சுமந்த ஒரு பேனாமுனைப் போராளியாக விடுதலைப் போராட்ட காலத்தில் எத்தனை வீரியத்தோடு அரசியல், நாடக, வானொலித்துறை சார்ந்து இயங்கினாரோ, அதே வீரியத்தையும் விவேகத்தையும் படைப்பிலக்கியம் என்னும் துறைக்குள் ஒருசேர இணைத்து, புனைவுகள் அற்ற போரியல் ஆவணங்களாக தன் படைப்புகளை வெளிக்கொணர்ந்த வண்ணமிருந்த அவரின் எழுத்துலகப் பணி, ஒரு விடுதலைப் போராளியின் ஆத்மதாகம் நிறைந்த காலப் பெரும் பணியாகவே இருந்தது.

'நீந்திக் கடந்த நெருப்பாறு' நாவல் தொடர்களின் வெளியீட்டின் பின்னர் நோயுற்றிருந்த அவர் அதிலிருந்து ஓரளவு மீண்டெழுந்த பின்னர், உலகப் போரியலின் வரலாற்றுத் திருப்புமுனையான 'குடாரப்புத் தரையிறக்கம்' குறித்துப் பேசும் 34 நாட்களில் நீந்திக் கடந்த நெருப்பாறு என்னும் வரலாற்று நாவலை எழுதி வெளியிட்ட நிறைவில் இருந்து நாம் இன்னும் மீளாத நிலையில், அவர் மறைந்தார் என்ற செய்தி மனத்துயரைத் தந்திருக்கிறது.

ஒரு படைப்பாளன் தன் படைப்புகளின் வழி, காலம் உள்ளவரை வாழ்வான் என்பது எத்துணை உண்மையோ, காலம் எம் மண்ணில் உற்பவித்த விடுதலைப் போராளி ஐயா யோகேந்திரநாதனும் தமிழ்த்தேசியத்தின் அழியா முகமாக என்றும் எம் நெஞ்சங்களில் நிறைந்தே இருப்பார்.

இலட்சியப் பற்றுறுதி மிக்க, எமது மண்ணின் முதுபெரும் ஆளுமை மாமனிதர் யோகேந்திரநாதனுக்கு எமது புகழ் வணக்கம். அவரின் ஆத்மா அமைதி பெறவும், இழப்பின் வலி சுமந்திருக்கும் அவரது குடும்பத்தினர் இத்துயரிலிருந்து மீளவும் எனது பிரார்த்தனைகள் - என்று குறிப்பிட்டுள்ளார்.

# தென்கொரியாவை உலுக்கிய கோர விமான விபத்து

## 179 பேர் உயிரிழப்பு; இருவர் உயிருடன் மீட்பு





தென்கொரியாவில் பயணிகள் விமானமொன்று வெடித்துச் சிதறிய விபத்தில் 179 பேர் உயிரிழந்துள்ள நிலையில் இருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், எயார் கனடா நிறுவனத்துக்கு சொந்தமான விமானமொன்று தரையிறங்கும் போது திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளது. விமானத்தில் பயணித்த 80 பேரும் அதிர்ஷ்ட வசமாக உயிர்த்தப்பியுள்ளனர்.

தாய்லாந்து தலைநகர் பெங்கொக்கிலிருந்து 175 பயணிகள், 06 விமான ஊழியர்கள் என மொத்தமாக 181 பேருடன் தென்கொரியாவின் முவான் நகருக்கு சென்ற ஜெஜு எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான விமானமொன்று உள்ளூர் நேரப்படி நேற்று (29) காலை 9.03 மணிக்கு தரையிறங்கியது.

இந்நிலையில், விமானம் எதிர்பாராதவிதமாக ஓடுபாதையிலிருந்து விலகி சுற்றுச்சுவரில் மோதி வெடித்துச் சிதறியது. இக்கோர விபத்தில் 179 பேர் உயிரிழந்துள்ள நிலையில் பயணியொருவரும் விமான சிப்பந்தியொருவரும் உள்ளடங்களாக இருவர் உயிருடன் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.



**லேண்டிங் கியர் இயங்கவில்லையா?**

விமான விபத்துக்கான காரணம் என்னவென்று உறுதி செய்யப்படவில்லை. லேண்டிங் கியர் சரியாக பணி செய்யாததால் விபத்து நடந்திருக்க வாய்ப்புள்ளதாக முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. விபத்துக்குள்ளான விமானம் பெங்கொக்கிலிருந்து தென்கொரியாவுக்குச் சென்றுள்ளது. அந்த விமானத்தில் தாய்லாந்தைச் சேர்ந்த பயணிகள் இருவர் இருந்தனர் என்று தென்கொரிய விமான போக்குவரத்துத்துறை தெரிவித்துள்ளது.

தென் கொரிய வரலாற்றில் இது மிக மோசமான விமான விபத்துகளில் ஒன்றாக அறியப்படுகிறது. முன்னதாக, கடந்த 1997இல் கொரியன் எயார்லைன்ஸ் விமானம் விபத்துக்குள்ளானதில் 228 பேர் உயிரிழந்தனர். அதன் பின்னர் நடந்த மிக மோசமான விமான விபத்தாக நேற்றைய விபத்து பதிவாகியுள்ளது.

**உயிரிழந்தோரின் குடும்பத்தாரிடம் மன்னிப்புக்கோரிய விமான நிறுவன சி.இ.ஓ.**

இந்நிலையில், விமான விபத்தை சமாளிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டதாக ஜெஜு எயார் நிறுவன சி.இ.ஓ. கிம் இ-பே தெரிவித்துள்ளார். இதன்படி ஜெஜு விமானத்தின் தலைமை நிர்வாக அதிகாரி, கிம் இ-பே, ஒரு தொலைக்காட்சி மாநாட்டின் போது, உயிரிழந்தவர்களின் குடும்பங்களிடம் ஆழ்ந்து குனிந்து விபத்துக்கு மன்னிப்பு கோரினார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘‘பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவளிப்பதே எங்களின் முதன்மையான முன்னுரிமை. விபத்தில் உயிரிழந்த பயணிகளுக்கும் அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் எங்களது ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். தற்போது, விபத்துக்கான சரியான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. மேலும் அரசு நிறுவனங்களின் அதிகாரப்பூர்வ விசாரணைக்காக நாங்கள் காத்திருக்க வேண்டும். காரணம் எதுவாக இருந்தாலும், தலைமை நிர்வாக அதிகாரியாக நான் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறேன்’’ - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பற்றியெரிந்த கனடா விமானம்**

கனடாவின் ஹாலிபேக்ஸ் விமான நிலையத்தில் எயார் கனடா நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் சுமார் 80 பயணிகளுடன் தரையிறங்கியது. ஆனால், விமானம் தரையிறங்கும்போது அதன் லேண்டிங் கியரில் பழுது ஏற்பட்ட நிலையில் இறக்கை பகுதி ஓடுபாதையில் உரசி, விமானத்தில் திடீரென தீப் பற்றியது.

விமானத்தில் தீப் பற்றியதை பார்த்த பயணிகள் பயத்தில் அலறத் தொடங்கினர். இதற்கிடையில் விமான நிலைய அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு தீயணைப்பு வாகனங்கள் மூலம் விமானத்தில் பற்றிய தீயை அணைத்தனர். இந்த சம்பவத்தில் விமானத்திலிருந்த 80 பயணிகளும் அதிர்ஷ்டவசமாக உயிர்த்தப்பினர்.

அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு முதலுதவி சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இந்த விபத்து தொடர்பான காட்சிகள் தற்போது சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றன. முன்னதாக தென்கொரியாவில் விமான விபத்தில் 179 பேர் உயிரிழந்த நிலையில், அடுத்த சில மணி நேரங்களில் கனடாவில் விமான விபத்து நிகழ்ந்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# முழு அரச மரியாதையுடன் மன்மோகன் சிங் உடல் தகனம்

**21 குண்டுகள் முழங்க சிதைக்கு தீ மூட்டினார் அவரது மூத்த மகள் உபிந்தர் கவுர்**

## ஜனாதிபதி முர்மு, பிரதமர் மோடி உள்ளிட்ட அரசியல் தலைவர்கள், உறவினர்கள் இறுதி அஞ்சலி; உலகத் தலைவர்கள் இரங்கல்








முன்னாள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் உடல் டில்லி நிகம்போத் காட் பகுதியில் முழு அரச மரியாதையுடன் 21 குண்டுகள் முழங்க சீக்கிய முறைப்படி தகனம் செய்யப்பட்டது. இறுதிச் சடங்கில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர், பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னாள் இந்தியப் பிரதமரும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான மன்மோகன் சிங் (வயது 92), கடந்த 2004 முதல் 2014 வரை பத்தாண்டுகள் பிரதமராக பதவி வகித்தார். அதன் பின்னர் மாநிலங்களவை எம்.பியாக இருந்த அவர் வயது மூப்பு காரணமாக கடந்த ஏப்ரல் மாதம் தீவிர அரசியலிலிருந்து விலகி ஓய்விலிருந்தார். இந்நிலையில், கடந்த 26ஆம் திகதி திடீரென உடல்நிலை பாதிக்கப்பட்ட மன்மோகன் சிங், டில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் இரவு 9.51 மணியளவில் காலமானார்.

இதனையடுத்து, மன்மோகன் சிங்கின் உடல் டில்லி மோதிலால் நேரு சாலையிலுள்ள அவரது இல்லத்துக்கு உடல் கொண்டு செல்லப்பட்டது.







அங்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் மோடி, சோனியா காந்தி, ராகுல் காந்தி உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர். மன்மோகன் சிங்கின் மனைவி குர்சரண் கவுருக்கு ஆறுதல் கூறினர்.

மன்மோகன் சிங்குக்கு 03 மகள்கள் உள்ளனர். மூத்த மகள் உபிந்தர் கவுர் (வயது 65), ஹரியானாவிலுள்ள அசோகா பல்கலைக்கழகத்தில் பேராசிரியையாக பணியாற்றுகிறார். 2ஆவது மகள் தாமன் கவுர் (வயது 61) பிரபல எழுத்தாளர். 3ஆவது மகள் அம்ருத் கவுர் (வயது 58), அமெரிக்காவின் ஸ்டான்ஃபோர்ட் சட்ட கல்லூரியில் பேராசிரியையாக பணியாற்றிவருகிறார். அவர் அமெரிக்காவிலிருந்து கடந்த 27ஆம் திகதி டில்லிக்கு திரும்பினார்.

குடும்பத்தினர், உறவினர்களின் அஞ்சலிக்கு பின்னர், மன்மோகன் சிங் உடல் நேற்றுமுன்தினம் (28) காலை அக்பர் சாலையிலுள்ள காங்கிரஸ் தலைமை அலுவலகத்துக்கு கொண்டு வரப்பட்டது. கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா, துணை முதலமைச்சர் டி.கே.சிவகுமார், தெலுங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி, இமாச்சல பிரதேச முதல்வர் சுக்விந்தர் சிங் சுக்கு உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

இதனையடுத்து காலை 10 மணியளவில் இறுதிஊர்வலம் தொடங்கியது. உடல்கொண்டு செல்லப்பட்ட வாகனத்தில் ராகுல் காந்தி, ரேவந்த் ரெட்டி, சித்தராமையா உள்ளிட்டோர் இருந்தனர். யமுனை நதிக்கரையிலுள்ள நிகம்போத் காட் பகுதிக்கு மதியம் 12 மணிக்கு மன்மோகன் சிங் உடல் கொண்டு செல்லப்பட்டது. அங்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, குடியரசு துணை தலைவர் ஜெகதீப் தன்கர், பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, ராஜ்நாத் சிங், ஜே.பி.நட்டா, மக்களவை தலைவர் ஓம் பிர்லா, முன்னாள் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ஷ மற்றும் இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான், பூட்டான் மன்னர் ஜிக்மே கேசர் நம்கெல் வாங்சுக், காங்கிரஸ் தலைவர் கார்கே, முன்னாள் தலைவர்களான சோனியா காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி, டில்லி முதலமைச்சர் ஆதிஷி, முப்படை தலைமை தளபதி அனில் சவுகான், முப்படை தளபதிகள் உள்ளிட்ட பலர் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

**முழு இராணுவ மரியாதையுடன் இறுதிச் சடங்குகள்**

தலைவர்களின் இறுதி மரியாதையை அடுத்து, மன்மோகன் சிங்கின் உடல் மீது போர்த்தப்பட்டிருந்த தேசியக் கொடி அகற்றப்பட்டு அவரது மனைவி குர்சரண் கௌரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனையடுத்து, உடல் தகன மேடைக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு, சந்தனக் கட்டைகள் மீது உடல் வைக்கப்பட்டு, சீக்கிய மத முறைப்படி மந்திரங்கள் ஓதப்பட்டு, இறுதிச் சடங்குகள் நடத்தப்பட்டன. இதில், மன்மோகன் சிங்கின் மனைவி குர்ஷரன் கவுர், மகள்கள், நெருங்கிய உறவினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சடங்குகளைச் செய்தனர். பின்னர் மன்மோகன் சிங் உடலைச் சுற்றி கட்டைகள் வைக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக பகல் ஒரு மணியளவில் 21 குண்டுகள் முழங்க முழு இராணுவ மரியாதை அளிக்கப்பட்டு மன்மோகன் சிங்கின் உடல் எரியூட்டப்பட்டது. சிதைக்கு அவரது மூத்த மகள் உபிந்தர் கவுர் தீ மூட்டினார்.

**உலகத் தலைவர்கள் இரங்கல்**

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ஐ.நா. பொதுச் செயலாளர் அண்டெனியோ குட்டேரெஸ் (António Guterres) உள்ளிட்ட தலைவர்களும் மன்மோகன் சிங் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**நினைவிட சர்ச்சை**

இந்நிலையில் முன்னதாக, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் இறுதிச் சடங்குகள் நடைபெற்ற இடத்தில் அவருக்கு நினைவிடம் அமைக்கும் வண்ணம் இடம் ஒதுக்குமாறு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பிரதமர் நரேந்திர மோடி மற்றும் உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வேண்டுகோள் விடுத்தார். அவ்வாறு இடம் ஒதுக்குவது, எளிய பின்னணியிலிருந்து உயர்ந்த ஒரு தலைவருக்கு செலுத்தும் மரியாதையாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். இதையடுத்து, மத்திய அமைச்சரவைக் கூட்டம் கூட்டப்பட்டு, அதன் முடிவுகள் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு தெரிவிக்கப்பட்டது. முன்னாள் பிரதமர்களுக்கு நினைவிடம் அமைப்பது தொடர்பாக அறக்கட்டளை உருவாக்கப்பட்டு அதன் முடிவுகளின்படி மன்மோகன் சிங்குக்கு நினைவிடம் கட்ட அரசு இடம் ஒதுக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

# ம.பியில் ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்த சிறுவன் உயிரிழப்பு




இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் 140 அடி ஆழ ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்த 10 வயது சிறுவன் பல மணி நேர போராட்டத்துக்கு பின்னர் மீட்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம், குணா மாவட்டத்தில் 140 அடி ஆழ ஆழ்துளை கிணறு அருகே, நேற்றுமுன்தினம் (28) விளையாடிக் கொண்டிருந்த சுமீத் மீனா என்ற 10 வயது சிறுவன் நிலைதடுமாறி ஆழ்துளை கிணற்றுக்குள் விழுந்துள்ளார்.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு, விரைந்த மீட்புப் படையினர் சிறுவனை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். இந்நிலையில் பல மணி நேர போராட்டத்துக்குப் பின்னர் நேற்று (29) காலை 9.30 மணியளவில் சிறுவன் மீட்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

ஆழ்துளை கிணறு மூடாமல், திறந்து இருந்ததுதான் இவ் உயிரிழப்புக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**ராஜஸ்தானில் ஆழ்துளை கிணற்றில் வீழ்ந்த மூன்று வயது சிறுமி**

ராஜஸ்தான் மாநிலத்தில் 700 அடி ஆழ ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்த 03 வயது சிறுமியை மீட்கும் முயற்சி இன்று ஏழாவது நாளாகவும் தொடர்கிறது.

ராஜஸ்தான் மாநிலம் கோட்புட்லி- பெஹ்ரோர் மாவட்டத்தில் 700 அடி ஆழம் கொண்ட ஆழ்துளை கிணறு அருகே, விளையாடிக் கொண்டிருந்த 03 வயது சிறுமி சென்ட்டா, கடந்த 23ஆம் திகதி விழுந்தார். இந்நிலையில் சிறுமியை மீட்கும் பணிகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

# வடக்கு ஆளுநருக்கும் ஜோசப் ஸ்டாலின் குழுவினருக்குமிடையே கலந்துரையாடல்



*பு.கஜிந்தன்*

வடக்கு மாகாணத்தில் கல்விப்புலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய இடமாற்றங்கள் உட்படப் பல்வேறு விடயங்கள் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை வெள்ளிக்கிழமை மாலை (27) ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

2017ஆம் ஆண்டு, வடக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய 04 மாவட்டங்களுக்கும் முதல் நியமனம் கிடைத்த ஆசிரியர்கள், யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ள நிலையில், அந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கான விடயம் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோருடன் கலந்துரையாடினர்.

மேலும் கடந்த காலங்களில் இடம்பெற்ற விசாரணைகளின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் அதில் தலையீடுகள் இருக்கின்றன எனவும் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் ஆளுநருக்கு சுட்டிக்காட்டினர்.

பாடசாலைகளில் பரீட்சைக்கு மாணவர்களிடமிருந்து பணம் அறவிடப்படுவது தொடர்பில் கேள்வியெழுப்பிய ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், வேறு சில மாகாணங்கள் பரீட்சைக்கு நிதி ஒதுக்குகின்றமையை சுட்டிக்காட்டி அந்த நடைமுறையைப் பின்பற்றுமாறு கோரிக்கை முன்வைத்தனர்.

அதைச் சாதகமாகப் பரிசீலித்து நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராயுமாறு கல்வியமைச்சின் செயலருக்கு ஆளுநர் பணித்தார்.

மேலும், பாடசாலைகள் மற்றும் கல்விப்புலத்திலுள்ள பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் ஆளுநருடன் இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துரையாடினர்.

வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் மு.நந்தகோபன், வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் கந்தையா பிரட்லி ஜெனட், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

# மீசாலை திருட்டுச் சம்பவம் இருவருக்கு விளக்கமறியல்

*பு.கஜிந்தன்*

சாவகச்சேரி - மீசாலை பகுதியில் வீடு புகுந்து நகைகள் மற்றும் டொலர்கள் என்பவற்றைத் திருடிய சந்தேகநபரொருவரும் அந்த நகைகளை வாங்கிய சந்தேகநபரும் வெள்ளிக்கிழமை (27) சாவகச்சேரி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நேற்றையதினம் விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

மீசாலை கிழக்கு மற்றும் மீசாலை மேற்கு பகுதிகளில் உள்ள வீடுகளில் தொடர்ச்சியாக ஒருவர் வீடுகளுக்குள் புகுவதும் மக்கள் துரத்தும்போது ஓடுவதும் போன்ற சம்பவங்கள் இடம்பெற்று வந்துள்ளன.

இந்நிலையில், கடந்த 23ஆம் திகதி மீசாலை பகுதியில் வயோதிபப் பெண்ணொருவர் தனியாக வசித்து வந்த வீட்டில் ஒரு சங்கிலி, ஒரு ஜோடி காப்பு மற்றும் இரண்டு மோதிரங்கள் என எட்டு பவுண் நகைகள் மற்றும் ஒரு தொகை டொலர் என்பன களவாடப்பட்டிருந்தன.

இந்நிலையில், இது குறித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இச்சம்பவம் குறித்த விசாரணைகளை மேற்கொள்வதற்காக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் மயூரன், கான்ஸ்டபிளான நிதர்சன் மற்றும் நிரு ஆகியோர் அடங்கிய குழுவினர் நியமிக்கப்பட்டனர்.

அதனடிப்படையில், விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மரம் வெட்டும் சந்தேகநபரொருவரைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டவேளை அவரிடமிருந்து நகைகள் மீட்கப்பட்டன. அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் நகைகளைக் கொள்வனவு செய்தவரும் கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும் சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவர்களை 14 நாட்கள் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# சைவப்புலவர் தேர்வுகளின் பெறுபேறுகள் வெளியாகின

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினால் 2024ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப் புலவர் பட்டத் தேர்வுகளின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன என அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

மேற்படி சைவப்புலவர் பட்டத் தேர்வில் செல்வி-கீர்த்திகா-றஞ்சன் (இணுவில்), இராமன்-இராமகிருஷ்ணன் (பத்தனை), திருமதி. மனோன் மணி-தட்சணாமூர்த்தி (மட்டக்களப்பு) ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

இளஞ்சைவப்புலவர் பட்டத் தேர்வில் சந்திரகுமார்-சுலெக்ஷி (வவுனியா), தெய்வேந்திரமூர்த்தி- செல்வநாயகி (பரந்தன்), சௌந்தரலிங்கம் - சதுஜா (வாழைச்சேனை), செல்வநாயகம் - வதனி (கோறளங்கேணி), மகேந்திரன்-டினுசா (வாழைச்சேனை), சாமித்தம்பி-கந்தசாமி (மட்டக்களப்பு), மகேஸ்வரன்-விபகரணி (மட்டக்களப்பு) , சந்திரமோகன்-டக்சலா (கல்குடா), ரவீந்திரன் - அபிராமி (வாழைச்சேனை), கனகலிங்கம்- சதுர்ஷனா (பொலன்னறுவை), தேவராசா- ஜெருஷன் (வாழைச்சேனை),பத்ம நாதன்- விஷாந்தினி (வாகனேரி), திருத்தணிவாவா-ஜெகநாதன் (களுவாஞ்சிக்குடி), தங்கத்துரை-யதுசிகா (மண்டூர்) ஆகியோர் சித்தியடைந்துள்ளார்கள் என அறிவித்துள்ளார்.

# உரும்பிராய் நபர் திடீர் உயிரிழப்பு

*பு.கஜிந்தன்*

நேற்றையதினம் யாழ்ப்பாணம் - உரும்பிராய் பகுதியில் உணவு அருந்திக்கொண்டிருந்த நபர் உடல் சுகவீனமடைந்த நிலையில் உயிரிழந் துள்ளார். இதன்போது உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த காசிப்பிள்ளை குவேந்திரன் (வயது 62) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந் துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் சனிக்கிழமை மதியம் பாண் சாப்பிட்டுக்கொண்டிருந்தவேளை அவருக்கு மூச்சுவிடச் சிரமம் ஏற்பட்டது. இந்நிலையில், சிகிச்சைக்காக கோப்பாய் வைத்தியசாலைக்கு கொண்டுசென்றவேளை அவர் உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். ஆஸ்துமா காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# நெல் அழிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்க கணக்கெடுப்பில் வஞ்சிப்பு

## சபா குகதாஸ் தெரிவிப்பு



கடந்த நாட்களில் நடைபெற்ற வெள்ள அனர்த்தம் காரணமாக வடக்கு மாகாணத்தில் பெருமளவு பெரும்போக நெற்செய்கையாளர்கள் நெல் அழிவைச் சந்தித்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்டஈடுகள் வழங்குவதாக அமைச்சரவைத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு கமநல நிலையங்கள் ஊடாக படிவங்கள் வழங்கப்படும் நிலையில், நெல் விதைப்பின் ஆரம்ப அழிவுகளைச் சந்தித்த விவசாயிகள் புறக்கணிக்கப்பட்டு இடைப்பட்ட காலத்தில் அழிவைச் சந்தித்த விவசாயிகள் உள்வாங்கப்படுவதுடன் அவர்களின் முழுமையான அழிவிலும் அரைவாசிக்கு குறைவான நிலப்பரப்புகளே பதியப்படுவதாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வேதனையுடன் தகவல்களை வெளிப்படுத்தியுள்ளனர் என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆரம்ப அழிவை எதிர்கொண்ட விவசாயிகள் பலர் அடுத்தகட்ட நெல் விதைப்பை மேற்கொள்ள முடியாத நிலையில், பணமில்லாது தடுமாறுகின்றனர். காரணம், ஏற்கனவே கடன்படுநிலையில் தான் முதற்கட்ட முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டில் அரிசிக்கு ஏற்பட்ட பற்றாக்குறை எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கப்படாது தடுப்பதற்கு உள்நாட்டு உற்பத்தி மேலும் கூட்டப்படவேண்டும். அதனடிப்படையில் அரசும், விவசாய அமைச்சும் அதன் அதிகாரிகளும் பாதிக்கப்பட்ட விவசாயிகளை வஞ்சிக்காது பாகுபாடு காட்டாது பாதிப்பின் உண்மையை விரைவாக கள ஆய்வுக்கு உட்படுத்தி ஆரம்ப முளை அழிவு மற்றும் இடைக்கால அழிவு இரண்டையும் பாதிப்பாக ஏற்று நிவாரணம் வழங்கவேண்டும். அதற்கான அழுத்தங்களை மாகாண ஆளுநர் மற்றும் கமநலத் திணைக்கள அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளார்.

# தீவக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண ஒருங்கிணைந்த நடவடிக்கை

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

*பு.கஜிந்தன்*

''தீவக மக்களுக்கு பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றைத் தீர்ப்பதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை விரைவில் நாம் முன்னெடுக்கவிருக்கின்றோம். இது தொடர்பில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவனுடனும் கலந்துரையாடியிருக்கின்றேன்''- என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

பிரிட்டன் வாழ் புங்குடுதீவைச் சேர்ந்த நலன்விரும்பிகளால் வட இலங்கை சர்வோதய குடிநீர் வழங்கல் திட்டத்துக்கு வெள்ளிரும்பிலான குடிதண்ணீர் பவுசர் கையளிக்கும் நிகழ்வு சனிக்கிழமை (28) புங்குடுதீவு புஸ்பா மணி மண்டபத்தில் இடம்பெற்றது.



வடக்கு மாகாண ஆளுநரால் பவுசர் கையளிப்பு மேற்கொள்ளப்பட்டு உதவிய நலன்விரும்பிகளின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுக்கல்லும் திரை நீக்கம் செய்யப்பட்டது.

இதன் பின்னர் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர், குடிநீரின் தேவை இன்று தீவகப் பகுதியில் மாத்திரமல்ல, யாழ்ப்பாண நகரப் பகுதியிலும் உணரப்பட்டுள்ளது. இன்று அங்கு குடிதண்ணீரின் தரம் மற்றும் அளவு தொடர்பில் பல பிரச்சினைகள் இருக்கின்றன.

கடல் நீரை நன்னீராக்கி குடிநீர் விநியோகத்துக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தாலும் வேறு குடிநீர் மூலங்களையும் கண்டறியவேண்டியவர்களாக நாங்கள் இருக்கின்றோம்.



தொண்டர் கந்தையா திருநாவுக்கரசின் எண்ணம், சிந்தனை நல்நோக்குடன் இருந்தமையால் அவர் அன்று ஆரம்பித்த வட இலங்கை சர்வோதய சங்கம் வியாபித்து விருட்சமாக வளர்ந்திருக்கின்றது. நாம் நல்ல எண்ணத்துடன் எதை ஆரம்பித்தாலும் அதை இறைசக்தியாவது வெற்றிகரமாக நடத்தி முடிக்கும்.

இந்த ஊர் மக்கள் புலம்பெயர்ந்து சென்றாலும் தமது சொந்த மண்ணை மறக்கவில்லை. அதனால்தான் அவர்கள் இன்றும் உங்களுக்கு உதவியைச் செய்கின்றார்கள். இவ்வாறு உதவி செய்ய முன்வந்த அவர்களுக்கு எனது பாராட்டுகள். இவ்வாறான உதவிகளை உரிய முறையில் நீங்கள் பயன்படுத்தி பலன்பெறவேண்டுமென ஆளுநர் தனது உரையில் குறிப்பிட்டார்.

இதேவேளை, புங்குடுதீவு பிரதேசத்தில் பொலிஸ் காவலரண் தேவையெனவும் ஏதாவது ஒரு வங்கி அமைக்கப்பட வேண்டுமெனவும் அந்தப் பிரதேச மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

வட இலங்கை சர்வோதய சங்கத்தின் அறங்காவலர் பொன். யமுனாதேவி தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல், வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், தீவகம் தெற்கு பிரதேச செயலர் க.சிவகரன், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஞானசுந்தரன், வேலணை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி அ.ஜெயக்குமாரன் மற்றும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பஸ் நிலையத்தில் பொருத்தப்பட்டிருக்கும் பெயர்ப்பலகையை மாற்றுமாறு மக்கள் கோரிக்கை

*தலவாக்கலை நிருபர்*

தலவாக்கலை பஸ் நிலையக் கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ள பிரதான பெயர்ப்பலகை உடைந்து பல மாதங்களாகியும் அதற்குப் பதிலாக புதிய பெயர்ப்பலகையைப் பொருத்துவதற்கு இதுவரை பொறுப்பான திணைக்களம் நடவடிக்கையெதுவும் எடுக்கவில்லையென தலவாக்கலை பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தலவாக்கலை பஸ் நிலையக் கட்டிடத் தில் பொருத்தப்பட்டிருந்த பிரதான பெயர்ப்பலகையிலுள்ள எழுத்துகள் அச்சிட்டுக் காணப்பட்ட பெனர் கிழிந்து தொங்குகின்றது. பெயர்ப்பலகையின் பின்புறம் மட்டும் எஞ்சியுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் காணாமல் போயுள்ளதாகவும் மக்கள் கூறுகின்றனர்.



இதனால் வெளியூர்களிலிருந்து தலவாக்கலை நகருக்கு வரும் பயணிகள், சாரதிகள் மற்றும் ஏனைய பணியாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் பஸ் நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள பிரதான பெயர்ப்பலகையை விரைவில் சரிசெய்யுமாறு தலவாக்கலை நகரவாசிகள் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அலுவிகாரை ரஜமகாவிகார பெரஹரா அரசியல் தலையீடின்றி நடைபெறும்

## புத்தசாசன கலாசாரப் பிரதி அமைச்சர்



*ஜே.எம்.ஹாபீஸ்*

மாத்தளை வரலாற்றுச் சிறப்புமிக்க அலுவிகாரை ரஜமகா விகாரையின் வருடாந்த பெரஹரா உற்சவம் எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. இம்முறை இப்பெரஹரா அரசியல் தலையீடின்றி நடைபெறுமென புத்தசாசன கலாசாரப் பிரதியமைச்சர் கமகெதர திசாநாயக்கா நேற்று (29) தெரிவித்தார்.

மேற்படி பெரஹரா ஏற்பாடுகள் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடல் புத்தசாசன கலாசாரப் பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்கா தலைமையில் இடம்பெற்றது. இதன்போது அவர் தெரிவித்ததாவது,

மேற்படி பெரஹரா உற்சவம் கடந்த 50 வருடங்களாக ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது. இம்முறை எதுவித அரசியல் ஊடுருவல்களுமின்றி சமயக்கிரியைகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து பெரஹரா ஊர்வலத்தை நடத்துவதாக ஏற்பாட்டுக் குழுவினர் முடிவுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

1974ஆம் ஆண்டு மாத்தளை பிரதேச செயலாளர் காரியாலயத்தினால் முதன் முதலாக ஏற்பாடு செய்யப்பட்ட இப்பெரஹரா பின்னர் அரசியல் தலையீடுகள் காரணமாக பின்னடைவை நோக்கிச் சென்றது. இம்முறை அரசியல் தலையீடின்றி விகாராதிபதி அலுவிகாரை சரனங்கார மகாநாயக்க தேரர் தலைமையில் பிரதேச செயலாளரின் வழிகாட்டலில் இதனை நடத்துவதென முடிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# கண்டியில் தொலைபேசி திருட்டு: சந்தேக நபர் கைது

*எம்.ஏ.அமீனுல்லா*

கண்டிக்கு பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்லும் பாடசாலை மாணவர்களின் கைத்தொலைபேசிகளைத் திருடிய சந்தேகத்தின்பேரில் ஒருவரை கண்டி பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மாணவர்களின் கையடக்கத் தொலைபேசிகள் திருடப்படுவது தொடர்பில் கண்டி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற பல முறைப்பாடுகள் தொடர்பில் அவதானம் செலுத்திய கண்டி பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் குழுவொன்று குறித்த நபரை நேற்று முன்தினம் (28) கைது செய்துள்ளனர்.

கண்டி - தலதா வீதியிலுள்ள பேக்கரி கடையில் கையடக்கத் தொலைபேசியை அவர் எடுத்தபொழுது வசமாக மாட்டிக்கொண்டுள்ளமை தெரியவருகின்றது.

கட்டுகஸ்தோட்டை கஹல்ல பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய சந்தேகநபரிடம் விசாரணை நடத்தியதில், அவர் திருடி அம்பத்தன்ன மற்றும் அக்குறணை ஆகிய இரண்டு கையடக்கத் தொலைபேசி திருத்தும் நிலையங்களுக்கு மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்த 15 கையடக்கத் தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நாளொன்றுக்கு 9,000 ரூபாவை ஹெரோயின் போதைப்பொருளுக்கு செலவழிக்கும் குறித்த சந்தேகநபர், நெரிசலான பஸ்களில் ஏறி பயணிகளை நெருக்கி, சட்டைப்பை மற்றும் கைப்பைகளிலிருந்து தொலைபேசிகள் மற்றும் பணப்பைகளைத் திருடுவதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

திருடப்பட்ட பொருட்களைக் கொள்வனவு செய்த குற்றச்சாட்டின் பேரில் கையடக்கத் தொலைபேசிக் கடையிலிருந்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மேலுமொருவர் கைது செய்யப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# லொறியின் சில்லில் சிக்குண்டு குழந்தை பலி!

ஹசலக்க பொலிஸ் பிரதேசத்திலுள்ள எட்டபகொல்ல என்ற இடத்தில் லொறியொன்றின் பின் சில்லில் அகப்பட்ட இரண்டு வயதுக் குழந்தையொன்று நேற்று முன்தினம் (28) இரவு மரணித்துள்ளது.

மரணித்த குழந்தை தனது பெற்றோருடன் உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்த வேளை நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறி திடீரென இயங்க ஆரம்பித்து குழந்தைமீது மோதியுள்ளது. இதனால் லொறியின் பின்புறச் சில்லில் மாட்டி குழந்தை படுகாயமடைந்துள்ளது.

மேலும் காயமடைந்த குழந்தை மஹியங்கனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி மரணித்துள்ளது.

லொறிச்சாரதி சந்தேகத்தில் கைதாகியுள்ள நிலையில், ஹசலக்க பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கண்டியில் தைப்பொங்கல் அழகியல் போட்டி

*பேராதனை நிருபர்*

மத்திய மாகாண இந்துமா மன்றமும் கண்டி அறக்கட்டளையும் இணைந்து நடத்தும் மாபெரும் தைப்பொங்கல் அழகியல் போட்டிகள் கண்டி இந்து கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சித்திரப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (05), இசை சனிக்கிழமை (11), நடனம் ஞாயிற்றுக்கிழமை(12) நடைபெறவுள்ளன. இதில் பங்குபற்ற ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் ஜனவரி 03 ஆம் திகதிக்கு முன் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

மேலதிக தகவல்களுக்கு 0779181832 தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென மத்திய மாகாண இந்து மாமன்றம் கண்டி அறக்கட்டளைத் தலைவர் துரைசாமி சிவசுப்ரமணியம் தெரிவித்தார்.

# கண்டியில் போக்குவரத்து விதிகளை மீறிய 543 பேர் கைது

*ஜே.எம்.ஹாபீஸ்*

கடந்த சில தினங்களில் கண்டிப் பிரதேசத்தில் மட்டும் போக்குவரத்து விதிகளை மீறிய 543 பேர் நேற்று (29) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கண்டி பொலிஸ் பிரதேசத்துக்குட்பட்ட 14 பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த போக்குவரத்துப் பொலிஸ் அதிகாரிகள் மேற்படி சோதனையை மேற்கொண்டனர். கண்டி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த பண்டாரநாயக்கவின் வழிகாட்டலில் பல்வேறு இடங்களிலும் மேற்படி சோதனைகள் இடம் பெற்றன.

போதையில் வாகனம் செலுத்தல், அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்துதல் உட்பட பல்வேறு போக்குவரத்து விதிகளை மீறியவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு வழக்குத் தொடரப்படவுள்ளதாக கண்டி தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# சிவனொளிபாதமலைக்குச் சென்ற பெண் திடீர் சுகயீனமுற்று மரணம்

*மஸ்கெலியா நிருபர்*

சிவனொளிபாத மலைக்குச் சென்ற பெண்ணொருவர் திடீர் சுகயீனமுற்ற நிலையில் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நேற்று முன்தினம் (28) சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

கல்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த ஆர். ஜி. ரேணுகா (வயது 56) என்ற பெண்ணே தரிசனம் செய்துவிட்டு திரும்பும் வேளையில் திடீர் சுகயீனமுற்ற நிலையில் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை மரணித்துள்ளார் என மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலை வைத்தியரொருவர் தெரிவித்தார்.

இப்பெண்ணின் உடற்கூற்றுப் பரிசோதனைகள் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் நடைபெறவுள்ளதாக அவரது உறவினர்கள் தெரிவித்தனர். பரிசோதனைகள் முடிந்த பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுமென மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

# மலையகத்தில் பெய்த அடை மழையால் கராம்பு, சாதிக்காய் அறுவடை வீழ்ச்சி

மலையகப் பிரதேசங்களில் தொடர்ந்து பெய்த அடை மழை காரணமாக உள்ளூர் ஏற்றுமதி உற்பத்திகளான கராம்பு, சாதிக்காய் போன்றவற்றின் அறுவடையில் வீழ்ச்சி காணப்படுவதாக உற்பத்தியாளர்கள் நேற்று (29)தெரிவித்தனர்.

மாத்தளை, ஹரிஸ்பத்துவ, வத்தேகம, உக்குவளை, அளவத்துகொட, முருதலாவ, கடுகண்ணாவ கம்பளை, இரத்தோட்டை போன்ற பிரதேசங்களில் அதிகளவில் கராம்பு மற்றும் சாதிக்காய் பயிரிடப்படுகின்றன. தொடர்ந்து பல நாட்கள் பெய்த மழை காரணமாக ஒருவகை வைரஸ் தாக்கத்துக்கு இப்பயிர்கள் உட்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

பொதுவாக பெப்ரவரி மாதமளவில் அறுவடை மேற்கொள்வதாகவும் ஆனால், இம்முறை அறுவடையில் வீழ்ச்சி ஏற்பட இடமிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தெடர்பாக ஏற்றுமதி விளைபொருட்கள் திணைக்கள அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கும் போது,

மழை அதிகம் காணப்பட்டால் 04 அல்லது 05 நாட்களில் கராம்பின் பிஞ்சுக் காய்கள் கழன்று விடுவதாகவும் அதேபோல், இக்காலத்தில் கடும் மழை காணப்பட்டதாகவும் தெரிவித்தார். இதனால் இம்முறை கராம்பு விளைச்சலில் மேலும் பாதிப்பு ஏற்படலாம் - என்றார்.

# குளவிக்கொட்டு: தொழிலாளர்கள் 08பேர் பாதிப்பு!

*மஸ்கெலியா நிருபர்*

அக்கரப்பத்தனை, பெல்மோரல் பெரிய நாகவத்தை தோட்டத்தில் கொழுந்து கொய்து கொண்டிருந்த எட்டு பெண் தொழிலாளர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்காகிய நிலையில், அக்கரப்பத்தனை மன்ராசி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மதியம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாரிய மரமொன்றில் கட்டப்பட்டிருந்த குளவிக்கூடு கலைந்து கொழுந்து கொய்து கொண்டிருந்த பெண் தொழிலாளர்களைத் தாக்கியுள்ளது. குறித்த எட்டுப்பேரில் நால்வர் சிகிச்சையின் பின்பு வீடு திரும்பியதோடு ஏனைய நான்கு பேரும் தொடர்ந்து தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# நியூஸிலாந்துக்கு பதிலடி கொடுக்குமா இலங்கை?

## இரண்டாவது ரி20 ஆட்டம் இன்று



(அஷீல் சிஹாப்)

சுற்றுலா இலங்கை மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான 03 போட்டிகள் கொண்ட ரி20 சர்வதேச தொடரின் இரண்டாவது போட்டி இன்று இலங்கை நேரப்படி முற்பகல் 11.45 மணிக்கு மவுங்கானுயில் அமைந்துள்ள பேய் ஓவல் கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகிறது. முதல் போட்டியில் 08 ஓட்டங்களினால் பரிதாப தோல்வியடைந்த இலங்கை அணி இன்றைய போட்டியில் நியூஸிலாந்துக்கு பதிலடி கொடுக்கக் காத்திருக்கிறது.

இலங்கை கிரிக்கெட் அணியானது வெள்ளைப்பந்து கிரிக்கெட் தொடரில் (ஒருநாள் மற்றும் ரி20) விளையாடுவதற்காக நியூஸிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இரு அணிகளுக்குமிடையில் 03 போட்டிகள் கொண்ட ரி20 சர்வதேச தொடர் மற்றும் 03 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் என்பன நடைபெறவுள்ளன. அதன்படி முதல் தொடராக ரி20 தொடர் தற்போது நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றியீட்டிய இலங்கை முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி ஒரு கட்டத்தில் 65 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. எனினும், பொறுப்புடன் ஆடிய டேரைல் மிச்சல் மற்றும் மைக்கல் பிரஸ்வெல் ஆகிய இருவரும் அரைச்சதம் கடக்க நியூஸிலாந்து அணியானது 20 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுகளை இழந்து 178 ஓட்டங்களை எடுத்தது.

179 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியில் குசல் மெண்டிஸ் – பெத்தும் நிசங்க சிறந்த ஆரம்பத்தைப் பெற்றனர். முதல் விக்கெட் இணைப்பாட்டமாக 121 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில், குசல் மெண்டிஸ் ஆட்டமிழந்தார். பின்னர் அடுத்தடுத்து 02 விக்கெட்டுகள் வீழ்த்தப்பட்டன.

60 பந்துகளில் 07 பௌண்டரிகள் மற்றும் 03 சிக்ஸர்கள் அடங்கலாக 90 ஓட்டங்களைப் பெற்ற பெத்தும் நிசங்க ஆட்டமிழக்க, பின்னர் வந்த வீரர்கள் ஒற்றை இலக்கங்களுடன் சொதப்ப இறுதியில் இலங்கை அணியானது 20 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுகளை இழந்து 164 ஓட்டங்களை மாத்திரம் பெற்று போட்டியில் தோல்வியடைந்தது.


# கோஹ்லியை 'கோமாளி' என விமர்சித்த ஆஸி. ஊடகம்

அவுஸ்திரேலிய அணியுடனான 4ஆவது டெஸ்ட் போட்டியில் ஆஸி. அணிக்காக அறிமுகமான 19 வயதான இளம் வீரர் சாம் கோன்ஸ்டஸுடன் விராட் கோஹ்லி மோதலில் ஈடுபட்டார். அதற்காக ஐ.சி.சி. அவருக்கு 20 சதவீதம் போட்டி சம்பளத்தை அபராதமாகவும் விதித்தது.

அறிமுக வீரரிடம் விராட் கோஹ்லி இப்படி நடந்து கொண்டது குறித்து பல முன்னாள் வீரர்கள் விமர்சித்தனர். இந்நிலையில், தங்களுடைய நாட்டைச் சேர்ந்த இளம் வீரரை வேண்டுமென்றே இடித்துத்தள்ளிய விராட் கோஹ்லியை மேற்கு அவுஸ்திரேலியா பத்திரிகையொன்று தங்களது முன் பக்கத்தில் கோமாளியைப்போல் சித்திரித்து மோசமாக விமர்சித்துள்ளது.

இதற்கு இந்திய முன்னாள் வீரர்களும் ரசிகர்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இந்தத் தொடர் ஆரம்பிக்கும் முன்னர் அவுஸ்திரேலியாவில் விராட் கோஹ்லிக்கு ரசிகர்கள் அதிகமாக உள்ளதால் அங்குள்ள அனைத்து ஊடகங்களும் தொலைக்காட்சி நிறுவனங்களும் விளம்பரங்களில் அவரை முன்னிலைப்படுத்தின.

குறிப்பாக, தற்போது கோமாளியென விமர்சித்துள்ள அதே ஊடகம்தான் விராட் கோஹ்லியை கிங் எனக் குறிப்பிட்டு செய்தி வெளியிட்டது.




# கறுப்பு கைப்பட்டியுடன் களமிறங்கிய இந்திய அணி



இந்திய – ஆஸி. அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் 4ஆவது டெஸ்ட் போட்டியின் 2ஆம் நாள் ஆட்டத்தின்போது இந்திய அணி வீரர்கள் கைகளில் கறுப்புப் பட்டி அணிந்து விளையாடினர்.

இந்திய முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் கடந்த வியாழக்கிழமை இரவு மறைந்த நிலையில், அவருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக இந்திய வீரர்கள் கடந்த வெள்ளிக்கிழமை போட்டியின் 2ஆவது நாள் ஆட்டத்தின்போது கைகளில் கறுப்புப்பட்டி அணிந்து விளையாடினர்.

## விளையாட்டுத் துளிகள்

மேற்கிந்திய தீவுகள் மகளிர் அணியுடனான 3ஆவது ஒருநாள் போட்டியிலும் 05 விக்கெட்டுகளினால் வெற்றியீட்டிய இந்திய மகளிர் அணி 03 போட்டிகள் கொண்ட தொடரை 3-0 என்ற அடிப்படையில் கைப்பற்றி மே.இ.தீவுகள் மகளிர் அணியை வெள்ளையடிப்புச் செய்தது.

★★★★★★★★★★★★★★★★★★

மெல்போர்னில் நடைபெற்றுவரும் அவுஸ்திரேலியா - இந்திய அணிகளுக்கிடையேயான பொக்சிங் டே டெஸ்ட் போட்டியில் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவில் ரசிகர்கள் வருகை தந்துள்ளனர். அதன்படி 87 ஆயிரத்து 242 ரசிகர்கள் இந்தப் போட்டியை நேரில் கண்டுகளித்துள்ளனர்.

★★★★★★★★★★★★★★★★★★

தென்னாபிரிக்காவுடனான முதல் டெஸ்ட் போட்டியின்போது பாபர் அஸாம் டெஸ்ட் கிரிக்கெட்டில் 4,000 ஓட்டங்களைக் கடந்தார். இதன் மூலம் சர்வதேச அளவில் விராட், ரோஹித்துக்கு பின் 3ஆவது வீரராக மூன்று வித கிரிக்கெட் (டெஸ்ட், ஒருநாள், ரி20) போட்டிகளிலும் சர்வதேச அளவில் 4,000 ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டிய வீராகவும் மற்றும் முதல் பாகிஸ்தான் வீராகவும் சாதனை நிகழ்த்தினார்.

★★★★★★★★★★★★★★★★★★

ஆஸி. அணியுடனான 4ஆவது டெஸ்ட் போட்டியின் போது ஜஸ்பிரிட் பும்ரா டெஸ்ட் கிரிக்கெட்டில் 200 விக்கெட்டுகளைக் கடந்தார். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் குறைந்த பந்துகளில் (8,484) 200 விக்கெட்டுகள் வீழ்த்திய 4ஆவது வீரர் என்ற சாதனையை அவர் படைத்தார். முதலிடத்தில் வாக்கர் யூனிஸ் (7,725 பந்துகள்) உள்ளார்.

★★★★★★★★★★★★★★★★★★

ஐ.சி.சியின் இந்த ஆண்டுக்கான சிறந்த வளர்ந்து வரும் வீராங்கனை விருதுக்கான பரிந்துரைப் பட்டியலில் இந்தியாவின் ஷ்ரேயங்கா பாட்டீல், அயர்லாந்தின் பிரேயா சார்ஜெண்ட், ஸ்கொட்லாந்தின் சஸ்கியா ஹார்லி மற்றும் தென்னாபிரிக்காவின் அன்னெரி டெர்க்சன் ஆகியோர் இடம் பிடித்துள்ளனர்.

★★★★★★★★★★★★★★★★★★

அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடைபெற்ற உலக ராபிட் செஸ் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டியில் இந்தோனேஷியாவைச் சேர்ந்த ஐரீன் சுகந்தரை வீழ்த்தி இந்தியாவின் கொனேரு ஹம்பி சம்பியன் பட்டம் வென்று அசத்தியுள்ளார். இந்த வெற்றியின் மூலம் சீனாவின் ஜூ வென்ஜுனுக்கு பிறகு அதிக தடவைகள் சம்பியன் பட்டம் வென்றவர்கள் பட்டியலில் கொனேரு ஹம்பி இரண்டாவது இடத்தில் உள்ளார். முன்னதாக 2019 ஆம் ஆண்டு ஜார்ஜியாவில் நடைபெற்ற தொடரிலும் ஹம்பி சம்பியன் பட்டம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

# 2024ஆம் ஆண்டின் வளர்ந்துவரும் வீரர் விருதுக்கான பரிந்துரையில் கமிந்து

ஐ.சி.சியின் 2024ஆம் ஆண்டின் வளர்ந்துவரும் வீரர் விருதுக்கு 04 வீரர்களை ஐ.சி.சி. பரிந்துரைத்துள்ளது. இதில் இலங்கை கிரிக்கெட் அணியின் இளம் சகலதுறை வீரர் கமிந்து மெண்டிஸ் இடம்பெற்றுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் பேரவையானது ஒவ்வொரு வருடமும் சிறந்த வீரர், சிறந்த வீராங்கனை, சிறந்த ஒருநாள் அணி, ரி20 அணி, டெஸ்ட் அணி உள்ளிட்ட பல்வேறு விருதுகளை வழங்கி வருகிறது. அதேபோன்று ஒவ்வொரு வருடமும் இளம் வீரர்களின் செயற்பாடுகளை கணக்கில்கொண்டு அவர்களுக்கு வளர்ந்து வரும் வீரர் விருது வழங்கி கௌரவித்து வருகிறது.

அந்தவகையில், 2024ஆம் ஆண்டுக்கான வளர்ந்து வரும் வீரர் விருதுக்கு 04 வீரர்களின் பெயர்களை ஐ.சி.சி. பரிந்துரைத்து பட்டியலை வெளியிட்டுள்ளது. அதில் இங்கிலாந்தைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர் கஸ் அட்கின்சன், இலங்கையின் கமிந்து மெண்டிஸ், பாகிஸ்தானின் சைம் அயூப் மற்றும் வெஸ்ட் இண்டீஸ் வேகப்பந்து வீச்சாளர் ஷமர் ஜோசப் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

கமிந்து மெண்டிஸ் இந்த ஆண்டில் குறிப்பாக, கிரிக்கெட்டில் சிறந்து விளங்கினார். இந்த ஆண்டில் மாத்திரம் 1,451 ஓட்டங்களைக் குவித்ததுடன் பந்துவீச்சில் 05 விக்கெட்டுகளையும் களத்தடுப்பில் 23 பிடியெடுப்புகளையும் எடுத்துள்ளார். இன்னும் 11 நாட்களுக்கு ரசிகர்கள் தாங்கள் விரும்பிய வீரருக்கு வாக்களிக்க முடியும்.



# தேசிய மட்ட குத்துச்சண்டை போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவனுக்கு வெள்ளிப்பதக்கம்

(சிவகுமார் திவியா)

தேசிய மட்ட இளையோருக்கான குத்துச்சண்டை போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவன் வு.தரணிதரன் வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

இளையோருக்கான இக் குத்துச்சண்டைப் போட்டியானது அண்மையில் 03 நாட்கள் கண்டியில் நடைபெற்றது. இதன்போது 69 - 71 கிலோ எடைப்பிரிவில் போட்டியிட்ட இம்மாணவன் இறுதிப்போட்டியில் கண்டி சென்.சில்வஸ்ரர்ஸ் கல்லூரி மாணவனை எதிர்கொண்டு இரண்டாம் இடத்தைப்பெற்று வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார்.

இப்போட்டியில் கண்டி வித்தியார்த்த கல்லூரி மாணவனுடன் தெரிவுப் போட்டியில் வெற்றியீட்டி அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகிய தரணிதரன் அரை இறுதிப்போட்டியில் கொழும்பு ரோயல் கல்லூரி மாணவனுடன் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியிருந்தார்.

இம்மாணவனுக்கான முழுமையான பயிற்சியையும் வழிகாட்டலையும் குத்துச்சண்டையின் வடமாகாண தலைமைப் பயிற்றுவிப்பாளர் எம்.நிக்சன் வழங்கியிருந்தார்.

இவரது முழுமையான வழிகாட்டலில் வெற்றிபெற்ற இம்மாணவன் வவுனியா மாவட்டத்துக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார்.



# ஆடைக்கட்டுப்பாட்டை மீறிய கார்ல்சென் சம்பியன்ஷிப் தொடரிலிருந்து நீக்கம்

## 200 டொலர் அபராதமும் விதிப்பு



உலக ரேபிட் அன்ட் பிளிட்ஸ் செஸ் சம்பியன்ஷிப் தொடரில் ஜீன்ஸ் அணிந்து வந்ததால் 05 தடவைகள் உலக சம்பியன் பட்டம் வென்ற மாக்னஸ் கார்ல்சென் போட்டியிலிருந்து நீக்கப்பட்டார். மேலும், ஆடைக் கட்டுப்பாட்டை மீறியதாக கார்ல்செனுக்கு முதல் தடவையாக 200 டொலர் அபராதமும் விதிக்கப்பட்டது.

குறித்த சம்பியன்ஷிப் தொடரின் 8ஆவது சுற்றில் ஜீன்ஸ் அணிந்து வந்ததால் ஆடையை மாற்றும்படி கூறியதற்கு கார்ல்சென் மறுத்துவிட்டதால் போட்டியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார். ஆடைக்கட்டுப்பாடானது ஃபிடே குழுவினரான தொழில்முறை வீரர்கள், அனுபவம் வாய்ந்தவர்களால் தீர்மானிக்கப்பட்டது. இந்த விதிமுறை பல ஆண்டுகளாக இருந்து வருகின்றது. எல்லாப் போட்டிகளுக்கு முன்பாகவும் இதுகுறித்து போட்டியாளர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

வீரர்களின் தங்குமிடம் போட்டி நடைபெறும் இடத்துக்கு நடந்துசெல்லும் தூரத்திலே இருக்கும்படி அமைக்கப்பட்டுள்ளது. விதிமுறைகளை கடைப்பிடிக்க ஏதுவாக இருக்க இந்த மாதிரியான அம்சங்களை ஏற்படுத்தியுள்ளது.

மாக்னஸ் கார்ல்சென் தடைசெய்யப்பட்ட ஜீன்ஸ் அணிந்து வந்து விதிமுறையை மீறினார். அவரது உடையை மாற்றும்படி கூறியும் அவர் ஏற்கவில்லை என்பதால் 9ஆவது சுற்றில் பங்கேற்கவில்லை. இது அனைத்து வீரர்களுக்கும் பொருந்தும். இதில் எந்தவிதமான பாகுபாடும் இல்லை. செஸ் விளையாட்டையும் அதன் மதிப்பையும் மேம்படுத்த ஃபிடே முயற்சித்து வருகிறது. விதிமுறைகளை அனைவரும் மதிக்க வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளது.

# டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது தென்னாபிரிக்கா

(அஷீல் சிஹாப்)

பாகிஸ்தான் அணியுடன் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் 02 விக்கெட்டுகளினால் வெற்றியீட்டிய தென்னாபிரிக்க அணி உத்தியோகபூர்வமாக முதல் அணியாக 2023 – 2025 டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது. மேலும் டெஸ்ட் சம்பியன்ஷிப் வரலாற்றில் தென்னாபிரிக்க அணி முதல் முறையாகவும் இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது.

09 அணிகள் பங்கேற்கும் 3ஆவது ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் போட்டிகள் கடந்த 2023ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. தொடரின் இறுதிப்போட்டி அடுத்த ஆண்டு ஜூன் மாதம் 11ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதிப்போட்டி தகுதிபெற அனைத்து அணிகளும் மல்லுக்கட்டிய நிலையில் இறுதியாக தென்னாபிரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து மற்றும் இலங்கை அணிகள் போட்டியில் இருந்தன. இதில் தென்னாபிரிக்க அணி முதல் அணியாக தகுதிபெற்றுள்ளது.

மற்றைய அணி எது என்பதை தீர்மானிக்க இந்தியா, ஆஸி. அணிகளுடன் இலங்கை அணிக்கும் சிறிய வாய்ப்பு காணப்படுகிறது. ஆனால் இலங்கை அணியின் வாய்ப்பு இந்திய – ஆஸி. அணிகளின் தொடர் முடிவில் தங்கியுள்ளது.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7